# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**அக்டோபர் 2002 ஜீவியம் 8 மலர் 6**

இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 19 |
| லைப் டிவைன் | 20 |
| அன்பரும் - நண்பரும் | 28 |
| அஜெண்டா | 38 |
| பரநலம் பரமனின் நலம் | 40 |
| அன்பர் கடிதம் | 45 |
| அபரிமிதமான செல்வம் | 47 |
| சாவித்ரி | 52 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 54 |
| புலன்களுக்குப் புலப்படாதது | 63 |


☆ ☆ ☆

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**731) சமூகப் பழக்கங்கள் ஒரே தலைமுறையில் மாறும். சமூகத்தின் நம்பிக்கைகள் மாற ஒரு நூற்றாண்டாகும். சமூகத்தின் அமைப்பு மாற அதன் ஆரம்ப நிலை அமைப்புகள் (units) அழிந்து புதுப்பிக்கப்பட வேண்டும். குடும்பம் இன்று அது போன்ற மாற்றத்தைப் பெற்று வருகிறது.**

***பழக்கமும், நம்பிக்கையும் மாறிய பின்னும் அமைப்பு மாறாது.***

உடை, சாப்பாடு, படிப்பு, சட்டம் போன்றவை பழக்கங்களால் நிர்ணயிக்கப்பட்டவை. கர்மம், நேர்மை, கடமை, நாணயம் போன்றவை நம்பிக்கைகளாகும். குடும்பம், பணம், மார்க்கட், சர்க்கார், நிர்வாகம், நீதி, போக்குவரத்து, தபால் போன்றவை அமைப்பால் ஏற்படுபவை.

உடை, உணவு, படிப்பு, சட்டம் ஆகியவை நம் தலைமுறையில் மாறியதை நாம் அறிவோம். ஆங்கிலப் படிப்பு வந்தவுடன் திண்ணைப் பள்ளிக்கூடம் மறைந்துவிட்டது. வேஷ்டியும், ஷர்ட்டும் மாறி பேண்ட்டும், slack shirt சிலாக்குமாயிற்று. புடவை மாறி சுரிதார் வருகிறது. B.A., M.A. போய் B.E., M.B.B.S., M.Com.,C.A. வருகிறது. முதலாளிக்குச் சாதகமான சட்டம் போய் கோர்ட் தொழிலாளிக்கு சாதகமாயிற்று. விவாகரத்துக்குச் சட்டமில்லாமல் இருந்து ஏற்பட்டுவிட்டது. தீண்டாமை ஒழிக்கப்பட்டது. பெண்களுக்குச் சொத்துரிமை வந்தது. தொழிலாளிக்குப் பென்ஷன் வருகிறது. பழக்கங்களால் ஏற்பட்டவற்றை சமூகம் மாற்ற நினைத்தால் எளிதில் ஏற்றுக் கொள்கிறது. ஒரு தலைமுறையில் மாற்றம் தெரிகிறது. ஓரிரு தலைமுறைகளில் மாற்றம் முழுமை பெறுகிறது.



இராகு காலத்தில் நம்பிக்கை மதம் மாறிய பிறகும் போவதில்லை. 5, 6 தலைமுறைகளுக்குப் பின் போகிறது. சுமார் 70, 80, 100 வருஷமாகிறது, இப்படிப்பட்ட நம்பிக்கைகள் மாறுவதற்கு. வெள்ளாழன் வீட்டில் வந்தவரை சாப்பிடாமல் அனுப்பப்பமாட்டான். அனுப்பினால் தலை வெடித்துவிடும். நிலத்தைக் கரம்பாகப் போடமாட்டான். செட்டியாரால் கணக்குப் பார்க்காமலிருக்க முடியாது. வாங்கிய கடனைக் கொடுக்காவிட்டால் குடும்பம் சர்வநாசமாகும் என நம்பும் செட்டியாரால், கடனைக் கொடுக்காமலிருக்க முடியாது. மந்திரம் ஓதும் பிராமணன் சந்தியாவந்தனத்தை விடமாட்டான். அதை விட்டாலும் பித்ருக்களுக்குரிய சிரார்த்தம், தர்ப்பணம் இவற்றை புறக்கணித்தால் பெரிய பாவத்தைச் செய்ததாகக் கருதுவான். மாறுகிற இடங்களைப் பார்த்தால் மாற்றம் நெடுநாளையதாக இருக்கும்.

பண்டமாற்றுப் போய் பணம் வந்தது. Nomads ஊர் ஊராகத் திரிந்த கூட்டம் ஓர் ஊரில் நிலைத்து ஊர் சுருங்கி குடும்பமாயிற்று. ஜாதி ஏற்பட்டது. அமெரிக்கா போய் இரண்டு தலைமுறையானாலும் தன் ஜாதியையே திருமணத்தில் மனம் நாடுகிறது. இன்று முடியாட்சி போய் மக்களாட்சி வந்துள்ளது. 70 ஆண்டாக ரஷியாவில் மக்களாட்சியைக் கொண்டுவர முயன்றார்கள். முடிவில் முடியாட்சி வேறு உருவத்தில் வந்தது. மக்களாட்சி என்று பெயரிட ஒன்று ஏற்பட 70 ஆண்டு அனுபவம் போதவில்லை. குடும்பம் தேவையில்லை என்று நினைத்து கூட்டுக் குடும்பம் போய் தனிக்குடும்பம் ஏற்பட்ட வீட்டில் 9 பேர் உடன் பிறந்தவர்கள். மனைவியுடன் பிறந்தவர் 7 பேர். அத்தனை பேரும் தனிக்குடும்பமாக வாழ்பவர்கள். கூட்டுக் குடும்பத்தை அழித்து தனிக்குடும்பத்தை நிலைநாட்டியதாக நினைப்பவர்கள். ஏதோ காரணத்தால் இந்த 16 தனிக்குடும்பங்களும் பல்வேறு ஊர்களிலிருந்து ஒரே ஊருக்கு வந்துவிட்டனர். அழிக்கப்பட்ட கூட்டுக் குடும்பம், வேறு உருவில் இன்று ஒன்று சேர்ந்துவிட்டது. குடும்பம், சர்க்கார் போன்ற அமைப்புகளும், மார்க்கட், கல்வித்திட்டம் போன்ற பொது அமைப்புகளும் எளிதாக

மாறுவதில்லை. அவை மாற வேண்டுமானால், பழைய அமைப்பை அஸ்திவாரத்தில் கலைத்து புதிய அமைப்பை அஸ்திவாரத்தில் ஏற்படுத்த வேண்டும்.

‘ஆமிஷ்’ என்ற பேரில் அமெரிக்காவில் ஒரு சிறு வகுப்பு மெஷின் பயன்படுத்தக் கூடாது என்ற கொள்கையைப் பின்பற்றி டிராக்டர், கார், T.V., போன் போன்றவற்றை விலக்கி வாழ்கின்றனர். அடுத்த தலைமுறையில் இக்கொள்கை வலுவிழந்தது. மகாத்மா காந்தி கதர் உடுத்த வேண்டும், மெஷின் பயன்படுத்தக் கூடாது என்பதைப் போன்ற கொள்கை இது. கி.பி. 2000த்தில் சுமார் சில ஆயிரம் அமெரிக்கர்கள் ஆமிஷ் கலாச்சாரத்தைப் பின்பற்றுவது பழக்கங்களை மனிதன் விட முடியவில்லை என்று காட்டுகிறது.

நம்பிக்கைகள் பழக்கங்களை விட ஆழ்ந்தவை. மூடநம்பிக்கைகளையே விட முடியாத மனிதன் நம்பிக்கைகளை எப்படி கைவிடப் போகிறான்? கர்மம் என்பதே ஒரு நம்பிக்கை என்கிறார் அன்னை.

மதம் நமக்கு அளித்த நம்பிக்கைகள் பல. கலாச்சாரம், பண்பு அளித்தவை வேறு. நாட்டின் சீதோஷ்ண நிலை - தட்ப வெட்ப நிலை - நமக்குப் பல்வேறு நம்பிக்கைகளை அளித்துள்ளது. உதாரணமாக இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா போன்ற பூமத்தியரேகை நாடுகளில் உழைப்பது அவசியமில்லை என்ற நம்பிக்கையுண்டு. உஷ்ணப்பிரதேசமாதலால் 12 மாதமும் பயிர் விளையும். மரம் காய்க்கும். பனி, குளிர்காலம், செடி கொடிகள் வதங்கும் winter நமக்கில்லை. ஐரோப்பாவில் 3 மாதம் குளிர்காலம். மரத்தில் இலைகளே இருக்கா. பனி, ஐஸ், snow மழைபோல் பெய்யும். வீட்டுக் கூரை மீது பனி மலைபோல் குவியும். 3 மாதம் எதுவும் பயிராகாது. 6 மாதம்தான் சூரியனைப் பார்க்கலாம். இந்த 6 மாதத்தில் 12 மாத உணவை சேகரம் செய்ய மனிதன் இரண்டு மடங்கு வேலை செய்ய வேண்டும். அத்துடன் குளிரிலிருந்து பாதுகாக்க கல்வீடு தேவை. குடிசையில் வாழ முடியாது. 3 மாத குளிரில் இரவும் பகலும்



வீட்டில் குளிரில்லாமலிருக்க விறகு எரிய வேண்டும். அதை வெய்யிற் காலத்தில் சேகரம் செய்யாதவன் குளிரில் இறந்துவிடுவான். இரவும் பகலும் உழைத்தால்தான் உயிரோடு இருக்க முடியும் என்ற மேல்நாட்டுப் பழக்கம் அவர்கள் பனிக்காலத்தால் வந்தது.

நமக்குக் குளிரில்லை. பனி, ice, snow, fog, frost இல்லை. மரம் காய்க்கிறது. பயிர் விளைகிறது. அதனால் கடின உழைப்பு அவசியமாக இல்லை. நமக்குச் சோம்பேறித்தனம் வளர்கிறது. இதுவும் நம் சீதோஷ்ண நிலைக்குரிய பழக்கம். மேல் நாட்டாரால் ½ மணி அமைதியாக உட்கார முடியாது. அமெரிக்கர்கள் 10 நிமிஷம் சும்மா உட்கார மாட்டார்கள். நம்மால் அவர்கள்போல ½ மணி வேலை செய்ய முடியாது.

சமூகம் எளிதில் மாறுவதில்லை. ஆனால் மாறுகிறது. மனித சுபாவம் மாறாது என்றாலும் மாறும் என்கிறார் அன்னை. 1950 முதல் 2000 வரை உலகம் பெருமாற்றங்களைக் கண்டது. அவை மேலெழுந்தவாரியான மாற்றங்களே. மாற்றம் கடினம், ஆனால் அவசியம்.

❊ ❊ ❊

**732) கடந்த 5000 ஆண்டுகளில் மனிதன் தன் மன நம்பிக்கைகளை psychological change மேல் மனத்தில் மாற்றியுள்ளான்.**

கடந்த 5000 ஆண்டுகளில் உலகம் மாறி, அதன் உருவம் மாறி, அதன் அடிப்படை உந்துதல் மாறி, அதன் போக்கு, இலட்சியம், கொள்கை, அமைப்பு என அத்தனையும் மாறியதை வரலாறு அறியும்.

இத்தனை மாறுதல்களும் பகவான் மேல்மனத்தில் ஏற்பட்டவை என்கிறார். ஆதி மனிதனுக்குள்ள கோபம், நரமாமிசம் சாப்பிடும் குணம், கொடூரம், விலங்குணர்வு போன்றவை இன்றும்

நாகரீக மனிதனுடைய உள் மனத்தில் அப்படியேயுள்ளது என்கிறார். இரண்டாம் மகாயுத்தத்தில் ஒரு கப்பல் தடம் மாறி நடுக்கடலில் நின்றுவிட்டது. கரை சேர வழியில்லாமல் மாதக்கணக்கானபொழுது, உணவில்லாமல் மாலுமிகள் ஒருவரை மற்றொருவர் சாப்பிட ஆரம்பித்தனர். பர்மா அகதிகள் நடந்து இந்தியா வந்தபொழுது பசி தாங்காமல் தன் குழந்தையைத் தானே கடித்து மனிதன் சாப்பிட்டான். நர மாமிசம் சாப்பிடும் பழக்கம் இத்தனை நாகரீகம் வந்தும் போகவில்லை. உள்ளே அமிழ்ந்துள்ளது.

ஆதிமனிதன் கல்லால் கருவிகள் செய்ததைக் கண்டு இன்று ஆராய்ச்சியாளர் வியக்கின்றனர். நியூடன் பிறந்து சில நூற்றாண்டுகளாகின்றன. நியூடனை விட, சாக்ரடீஸை விட இனி சிருஷ்டியில் மனித மனம் உயர முடியாது என்கிறார் பகவான். இன்று electron microscope மைக்கிராஸ்கோப் செய்ய இன்றைய நிலையில் எவ்வளவு அறிவும் திறமையும் வேண்டுமோ, அவ்வளவு அறிவும் திறமையும் கல்லால் கருவி செய்ய stone tools அன்று ஆதி மனிதனுக்குத் தேவைப்பட்டது என்கிறார் பகவான். இந்தப் பல்லாயிரம் ஆண்டுகளில் மனிதனுடைய அடிப்படை புத்திசாலித்தனம் உயரவில்லை என்கிறார் பகவான்.

இலட்சக்கணக்கான மாறுதல் ஏற்பட்டுள்ளன. அவை மேல் மனத்தின் சாதனைகள். ஆழ்ந்த மனம் அன்றுபோல் இன்றும் உள்ளது. அதில் மாற்றமோ, முன்னேற்றமோ இல்லை.

**மனித வாழ்வு வளர்ந்துள்ளது. அடிப்படை மனத்தின் அமைப்போ, திறனோ மாறவில்லை என்கிறார்.**

நடந்தவன் இரயிலில் போகிறான், விமானத்தில் பறக்கிறான், ராக்கெட்டில் சந்திரனுக்குப் போகிறான். இவற்றைக் கண்டுபிடிக்க விஞ்ஞானமும், விஞ்ஞான அறிவும் வளர்ந்துள்ளன. உள்ளூரில்



செய்ததையே வெளியூரிலும், வெளிநாட்டிலும் போய் செய்கிறானே தவிர, போகும் வேகம், வசதி, முறை சௌகரியமாக மாறியதே தவிர போகும் மனிதன் மாறவில்லை. அவன் அடிப்படை வாழ்வு மாறவில்லை. அந்த வாழ்வை நிர்ணயிக்கும் புத்திசாலித்தனம் உயரவில்லை. அன்றே - 5000 வருஷத்திற்கு முன்பே - அந்த அறிவு உச்சகட்டத்தை எட்டி விட்டது என்கிறார். இனி உயர வழியில்லை என்பதால், பரிணாமத்தால் மனத்திலிருந்து உயர்ந்து Supermind சத்திய ஜீவியத்தை எட்டினால்தான் மனத்திற்கு வளர்ச்சியுண்டு.

வாழ்வும், வசதியும், ஊரும், உலகமும் மாறியது உண்மை. அவற்றை நிர்ணயிக்கும் உணர்வும், அறிவும், திறனும், மனமும் மாறவில்லை.

ஆயிரம் வருஷமாக இருந்த வேஷ்டி இன்று pant ஆக பெரும்பாலும் மாறியுள்ளது. 12ஆம் நூற்றாண்டுவரை இந்தியப் பெண்கள் மேலாடையில்லாமலிருந்தனர். முஸ்லீம் ஆட்சி வந்து மேலாடையை ஏற்படுத்தினர். புடவை இன்று சுரிதாராகிறது.

இட்லியும், தோசையும் 100அல்லது 200 ஆண்டுகட்கு முன் வந்ததே. அதுவும் மாறலாம். இவை உடை, உணவு மாற்றங்கள்.

5000 ஆண்டுகளில் ஏற்பட்டவை பெருமாற்றங்கள். ஆனால் அவை அனைத்தும் மேல்மனத்திற்குரிய மாற்றங்களேயாகும். அவை,

1. நாடோடியான மனிதன் ஊரை ஏற்படுத்தி அங்கேயே தங்கினான்.
2. விவசாயத்தை மட்டும் நம்பி ஊரில் வாழ்ந்தான்.
3. விவசாயத்தை நம் நாட்டில் 35% மக்களும் மேல்நாடுகளில் 97% மக்களும் கைவிட்டனர்.

4. ஊரைச் சுற்றி 5 மைலில் உள்ள குடும்பங்களுடன் சம்பந்தம் செய்தான்.
5. இன்று திருமணம் தமிழ்நாடு முழுவதும் தடையின்றி நடக்கிறது. வெளியிலும் அனுமதிக்கப்படுகிறது.
6. விஞ்ஞான வாழ்வை ஏற்றுக்கொண்டு, ரயில், காரில் பிரயாணம் செய்கிறான்.

இவ்வளவும் மேல் மனத்திற்குரிய பழக்கங்களில் ஏற்பட்ட மாறுதல் எனில் ஆழ் மனப்பழக்கங்கள் எவை? நம் ஆழ்மனப் பழக்கங்களும் விலங்கினத்திற்குரியவையும் ஒன்றே. பசி, தாகம், தூக்கம், இனஉணர்வு, நமக்கும் விலங்குகட்கும் ஒன்றே. விலங்கு வாழ்வு மாறுவதே ஆழ்மனம் மாறுவதாகும். சத்திய ஜீவன் பிறந்தால்தான் அது மாறும்.

அறிவு ஒன்றுதான் நமக்கும் விலங்குகட்கும் உள்ள வித்தியாசம். போட்டி, பொறாமை, பொய் ஆகியவற்றை மனிதன் கைவிட்டால் மேல்மனத்தில் மேற்பகுதியிலிருந்து மேல் மனத்தின் ஆழ்ந்த பகுதிக்கு மனிதன் மாறுகிறான். அம்மாறுதலே பெரும் மாறுதல் எனக் கருதப்படும்.

வாழ்க்கை வசதிகள் மாறியுள்ளன. அறிவு வளர்ந்துள்ளது. செயல் திறனடைந்திருக்கிறது. சக்தி ஏராளமாக வளர்ந்துள்ளது. உள்ளூரிலேயே இருந்த மனிதன் உலகெங்கும் சுற்றி வருகிறான். ஒரு மொழி பேசியவன், பல மொழிகளை அறிய முயல்கிறான். கல்வி பரவி வருகிறது.

**ஆனால், மனிதன், மனிதனாகவே இருக்கிறான்.**
**அதாவது திறமையான விலங்காக மாறியுள்ளான்.**
**அடிப்படையான விலங்கு வாழ்வை விட்டு மனிதன் மாறவில்லை.**

❊ ❊ ❊



## 733) மனிதன் பிறந்தபொழுது கடைசி முறையாக ஜீவியம் மாறியது.

***ஆதி ஜீவியம்.***

பெரிய மாறுதல்கள் ஆரம்பத்திலேயே தலை எடுப்பதுண்டு. Human consciousness மனித ஜீவியமும் அப்படியே. மனிதன் பிறந்தபொழுது விலங்கின் ஜீவியம் மனித ஜீவியமாக மாறியது. அதன்பின் மனித ஜீவியம் இன்றுவரை அதன் அடிப்படையில் அன்றிருந்ததுபோலவே இருக்கிறது. அதில் மாற்றமில்லை.

இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்கள் பெரிய இலக்கியங்கள். ஆனால் நாளடைவில் அவற்றுள் இடைச் செருகல்கள் ஏற்பட்டதாகப் பண்டிதர்கள் நினைக்கிறார்கள். மொழி பெயர்ப்பு என்று ஏற்பட்டபொழுது பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. ஆனால் வேதம், உபநிஷதம், கீதை ஆகியவை அன்றிருந்ததுபோல் எந்த மாற்றமும் இல்லாமலிருக்கின்றன. வேதம் பெரியது. எனவே மாறாது. இராமாயணம் கதை. எனவே மாறக் கூடியது.

அரசியல் நிர்ணயச் சட்டம் (constitution), நாட்டில் வழங்கும் சட்டம், (Acts of Parliament and Legislatures), சர்க்கார் உத்தரவு (G.O) ஆகியவற்றுள் அரசியல் நிர்ணயச் சட்டம் அடிப்படையானது. இந்தியாவில் கடந்த 44 வருஷமாக அதில் மாற்றமில்லை. திருத்தங்களுண்டு. திருத்தமும் அடிப்படையை ஒட்டியே இருக்கும். அமெரிக்காவில் அரசியல் நிர்ணயச் சட்டம் 200 ஆண்டுகளாக இருக்கிறது. மாற்றமில்லை. அதாவது அடிப்படையான மாற்றமில்லை. இங்கிலாந்தில் (written constitution) அரசியல் நிர்ணயச் சட்டம் எழுத்துருவமே பெறவில்லை. நாட்டில் சட்டங்கள், சர்க்கார் உத்தரவு மாறும். அதிகமாக மாறும். அடிக்கடி மாறும். அடிப்படையே மாறும். ஆனால் அரசியல் நிர்ணயச் சட்டம் மாறுவதில்லை.

மனிதனுக்குப் பழக்கம், நம்பிக்கை, அமைப்பு என்பவையுண்டு.

இவை மேலெழுந்தவாரியானவை. இவை மாறும். ஜீவியம் இவற்றைக் கடந்தது. அடிப்படையானது. எனவே மாறாது. மனிதன் பிறந்த பொழுது விலங்கின் ஜீவியம் மனித ஜீவியமாக மாறியது. இனி மாற வேண்டுமானால் சத்திய ஜீவியமாக மாறுமே தவிர அதன் இன்றைய அமைப்பு மாறுவதில்லை.

ஜீவியம் மனிதன் பிறந்தபொழுது மாறியது பிறகு மாறவில்லை என்பதை பகவான் அன்று மனிதனுக்கிருந்த அறிவு இன்றுவரை அதிகப்படவில்லை என்ற கருத்தாலும் தெரிவிக்கின்றார்.

ஓரளவு இந்த உண்மையை, பேனா, எழுத்து, துப்பாக்கி, டைப்ரைட்டர், பேப்பர், மருந்துகள் ஆகியவற்றில் பார்க்கலாம். இவை கண்டுபிடிக்கப்பட்டபொழுது இருந்த அடிப்படை நிலை இன்றுவரை மாறாமலும், ஏற்படும் மாறுதல்கள் மேலெழுந்தவாரியாக இருப்பதையும் காணலாம். கப்பல் அன்றிலிருந்து, இன்றுவரை ஆயிரம் மாறுதல்களை அடைந்தாலும், முதலில் கப்பல் கண்டுபிடிக்கப்பட்ட பொழுது இருந்த தோற்றம், மிதக்கும் தத்துவம் இன்றும் மாறவில்லை. கம்ப்யூட்டரும் அதேபோல் ஆரம்பத்தில் எப்படி addition based manipulations கூட்டல் கழித்தல் அடிப்படையில் ஏற்பட்டதோ இத்தனை மாறுதல்கட்குப் பின்னும் அதே அடிப்படையைக் கொண்டதாக உள்ளது.

அரச மரம் அன்றுபோல் இன்றும் இருப்பதுபோல், எந்த ஜீவராசியும் (species) ஆரம்பத்திலிருந்து முடிவுவரை மாறுவதில்லை. அதனால்தான் ஸ்ரீ அரவிந்தர் ஆதிமனிதனுக்கு இன்றைய மனிதனுடைய அறிவு உண்டு என்றார்.

ஏற்படும் மாற்றங்கள் எவ்வளவு பெரியதாகத் தோன்றினாலும் அவை மேல் மனத்திற்குரியவையே. அடிப்படையான மனித ஜீவியம் (human consciousness) மாறுவதில்லை. அங்கு மாற்றம் உண்டானால், சத்திய ஜீவன் பிறப்பான்.



மனித ஜீவியம் என்பது மேஜெழுந்தவாரியாக உடல் தோற்றம், உணவு, உடை பழக்கங்களால் அறியப்படுகின்றது என்றும், அதை நிர்ணயிப்பது உடலமைப்பு, செல்லின் அமைப்பு, gene, chromosome, DNA ஆகியவை. அவை மாறாதவரை மனிதன் மாறப் போவதில்லை.

என்ஜின் என நாம் அறிவது மின்சார மோட்டாரால் இயக்கப்படுகிறது. பெட்ரோல், டீசலாலும் ஓடுகிறது. நீராவியால் ஓடிற்று. அதற்கு முன் water mill நதியின் ஓட்டத்தால் மோட்டார் இயங்கியது. எது மாறினாலும் அடிப்படையில் மோட்டார் என்பது சுழலும் சக்கரம்.

இதுவே உண்மையானால் நம் இலட்சியங்களாகக் கருதுபவை என்னாவது?

- ✳ மனிதன் இறைவனை வழிபட வேண்டும்.
- ✳ அன்பால் செயல்பட வேண்டும்.
- ✳ விலங்குபோல் வாழக் கூடாது.
- ✳ உலகம் சுருங்கி சிறு கிராமமாக வேண்டும்.
- ✳ போர் அழிய வேண்டும்.
- ✳ வசதி அதிகரிக்க வேண்டும்.
- ✳ யோகம் செய்ய வேண்டும்.
- ✳ மோட்சம் பெற வேண்டும்.
- ✳ மனிதர்கள் சமமாக வாழ வேண்டும்.
- ✳ ஜனத்தொகை பெருகக் கூடாது.
- ✳ இயற்கை விபத்திலிருந்து மனிதன் பாதுகாக்கப்பட வேண்டும்.
- ✳ அறிவு வளர்ந்து அன்பாக முதிர வேண்டும் என்ற இலட்சியங்களையும், இதர வேறு உலக இலட்சியங்களையும்

நாம் கருதினால், ஆராய்ந்தால், ஆழ்ந்து சிந்தித்தால், அவ்வளவு மாறுதல்களும் மேல்மனத்திற்குரியன. எதுவும் மனித உடலமைப்பையோ, ஆழ்மனத்தையோ, அடிப்படையில் செல், DNAஇன் அமைப்பையோ தொடக் கூடியவையில்லை. அவை மாறாதவரை மனித ஜீவியம், மனித ஜீவியமாகவேயிருக்கும், மாறாது.

❉ ❉ ❉

**734) உடல் மனத்தை நிர்ணயிப்பது சிறிய உண்மை. மனம் உடலை நிர்ணயிப்பது பெரிய உண்மை.**

***உண்மையின் இரு உருவங்கள்.***

இலட்சியம், பாசம், நட்பு, உறவு, குடும்பம் போன்ற போற்றப்படும் கருத்துகளுக்கு அடிப்படையாகப் பணம், சொத்து, ஆதாயம் இருப்பதை உலகம் அறியும். இலட்சியவாதியை யதார்த்தவாதி (materialist) அந்த அடிப்படையில் கேலி செய்வான். இது உண்மை, ஆனால் முடிவான உண்மை இது அல்ல. முடிவான உண்மையை அறியும்பொழுது பணமும், சொத்தும் இலட்சியத்தாலும், இலட்சியக்கருத்துகளாலும் எழுந்தவை என அறியலாம்.

Life Divine நூலின் கடைசி அத்தியாயம் நூலில் அதிக நீளமுள்ளது. சுமார் 55 பக்கமுள்ளது. ஆரம்பத்தில் முதல் அத்தியாயம் 4 பக்கம், முதல் 15 அத்தியாயங்கள் 10 பக்கம். போகப் போக அத்தியாயங்கள் நீண்டு முடிவான அத்தியாயம் மிக நீளமானதாக அமைந்தது. அதை Divine Life என்றார். அதை மட்டும் தனியே படித்தால் அதை ஒரு தனிப் புத்தகம் என்று கருதுவார்கள். நூலின் முக்கியக் கருத்துகளின் சாரம் அதனுள் உள்ளன. அவ்வத்தியாயத்தில் முக்கியமானது மேலே சொல்லப்பட்ட கருத்தாகும்.



நடைமுறையில் பக்தர்களுக்கு இக்கருத்தை வேறுவகையாக விளக்கலாம். நாம் வாழ்வுக்கும், சந்தர்ப்பத்திற்கும், கர்மத்திற்கும், தலைவிதிக்கும், சமூகத்திற்கும், குடும்பத்திற்கும், கடமைக்கும், மனச்சாட்சிக்கும் கட்டுப்பட்டுள்ளோம். இதனால் மனிதன் அந்த அளவில் சிறைப்பட்டவன். அவனுக்குச் சுதந்திரமில்லை. அன்னையின் வழி மாறியது. வாழ்வு அவனுக்குக் கட்டுப்படும். சந்தர்ப்பங்களை அவன் நிர்ணயிக்கலாம். கர்மத்தை அழிக்க முடியும். தலைவிதி என்பதை மனிதனால் மாற்ற முடியும். சமூகம் பக்தனைச் கட்டுப்படுத்தாது. குடும்பம் அவனுக்குட்படும். கடமை என்பது அன்னைக்கு மட்டுமேயுரியது. பக்தன் மனச்சாட்சியைக் கடந்தவன். மேற்சொன்ன உண்மையை மனம் புரிந்து ஏற்றுக்கொண்டால், ஆயிரம் வகையான சிறைகளிலுள்ள மனிதன், சுதந்திரம் பெறுவான்.

**அவன் மனம் நினைத்தது நடக்கும்.**

சிருஷ்டியின் இரகஸ்யத்தை உலகில் இதுவரை எவரும் கண்டதில்லை. இதுவரை சிருஷ்டியைப் பற்றிய கருத்துகள் சிறுபிள்ளைத்தனமானவை என்கிறார் அன்னை. பகவான் ஸ்ரீ அரவிந்தர் சிருஷ்டியைத் தத்துவமாகவும், ஒரு முறையாகவும், இந்த நூற்றாண்டு விஞ்ஞானிகளின் கருத்தை எடுத்து ஆராய்ந்து அவற்றிற்குப் பதில் கூறும் வகையிலும் எழுதியுள்ளார். அந்த விளக்கத்தின் முதற்பாகம் தெளிவாக முடிந்தபின் "இது பெரிய கருத்து. கீழிருந்து மேலே போவதற்குப் பதிலாக (from matter to mind) மேலிருந்து கீழே வந்தால் தெளிவிருக்கும்" என்றவர் இது மாறும் இடத்தில் மேற்கண்டதைக் கூறுகிறார்.

உடல்தான் நடைமுறையில் நம்மை நிர்ணயிக்கிறது எனினும், உடலினுள் உள்ள subconscient ஆழ்ந்த மனமே உடலை நிர்ணயிப்பதால், முடிவாக நிர்ணயிப்பது மனமாகும் என்கிறார். தத்துவத்தை விட்டு நடைமுறையில் இந்த உயர்ந்த தத்துவத்தின்

பலனைப் பெற வேண்டுமானால் மேற்சொன்ன கருத்தை கீழ்க்கண்டவாறு கூறலாம்.

**அடிமையான மனிதன் அன்னையை ஏற்றுக் கொண்டால் அனைத்தும் அவனுக்கு அடிமையாகும்.**

சர்க்கார் தன் செலவில் ரோடு போடுகிறது, பள்ளிக்கூடம் கட்டுகிறது, அபிவிருத்திக்கானவற்றைச் செய்கிறது என்பது உண்மை. மறுக்கமுடியாதது.

- **சர்க்கார் மக்களுக்குச் செலவு செய்து சேவை என்பதைச் செய்கிறது என்பது சிறிய உண்மை.**
- **சர்க்காருக்குப் பணம் இல்லை. அது பொதுமக்கள் பணம் என்பது பெரிய உண்மை என்று நாம் கூறுவது போன்றது மேற்கூறிய சட்டம்.**

**சிருஷ்டி** என்பது பிரம்மம் சச்சிதானந்தமாகி, சத்திய ஜீவியமுமாகி, மனத்தை உற்பத்தி செய்ததாகும். சிருஷ்டி மனத்தோடு முடிகிறது. மனமே சிருஷ்டியின் கடைசி கட்டம்.

மனம் வாழ்வாகவும், உடலாகவும் (ஜடம்) மாறியது என்பது ஸ்ரீஅரவிந்தம். உடலுக்கு வாழ்வு என்ற உயிரும், மனமும் உண்டு என நாம் அறிவோம். **மனமே உயிராகவும், உடலாகவும் மாறியது என்பது ஸ்ரீ அரவிந்தம்.**

உடல் என நாம் அறிவது subconscious mind ஆழ்மனத்தின் இருண்ட உருவம். உயிர் அடுத்த நிலை. முதலாளி மனம், மானேஜர் உடல். மானேஜர் கம்பனி நிர்வாகத்தை மேற்கொண்டு தன்னையே முதலாளியாகக் கருத ஆரம்பித்தார். பின்னர் அதை நம்பினார். அதையே முடிவாகவும் நம்பினார். முதலாளியிடம் அதைக் கூறினார். முதலாளியும் இன்று அதையே



நம்புகிறார் என்பதைப்போல், உடல் தன் ஆதிக்கத்தில் மனமிருப்பதாகக் கூறி அதை மனம் நம்பிவிட்டது. அதனடிப்படையில் A sound mind in a sound body என்ற பழமொழியும் எழுந்துள்ளது. இது இன்றுவரை உலகம் நம்புவது.

ஸ்ரீ அரவிந்தம் சிருஷ்டியை விவரித்து மேற்சொன்ன விளக்கத்தால் கூறியது புதிய, பெரிய உண்மை. இந்த reversal of consciousness மனமாறுதல் பூரண யோகத்திற்கு இன்றியமையாதது. மனிதனுடைய தவறான எண்ணங்கள் பலவற்றிற்கு அடிப்படை இச்சிறிய உண்மை.

அவை:

1. பணம் வாழ்வுக்கு முக்கியம்.
2. Tehnology வாழ்வை முன்னேற்றுகிறது.
3. சர்க்கார் சமூகத்தைவிடப் பெரியது.
4. வாழ்வு சிரமங்களாலானது.
5. மரணம் தவிர்க்க முடியாதது.

ஸ்ரீ அரவிந்தம் எதிராகக் கூறும் உண்மைகளை மனம் ஏற்க, யோகம் அதனடிப்படையில் சித்திக்க, இச்சிறிய உண்மையைக் கைவிட்டு, ஸ்ரீ அரவிந்தர் கூறும் பெரிய உண்மையை மனம் விளங்கி ஏற்று, செயல்பட வேண்டும்.

❊ ❊ ❊

**735) உடல் அசைவுகளே நாம் என இருந்தால் உடல் மனத்தைக் கட்டுப்படுத்தும். மனத்தின் எண்ணங்களே நாம் என இருந்தால் மனம் உடலை நிர்ணயிக்கும்.**

***மனம் உடலின் அதிபதி.***

‘உலகம்’ என்று சொல்லும்பொழுது அவரவர்களுக்கு அது வேறுபடும். கிராமத்தில் பிறந்து அங்கேயிருப்பவனுக்கு அவன் குக்கிராமமே உலகமாகும். முனிசிபாலிட்டியில் வேலை செய்பவன் சேர்மனே கடவுள் என்று நினைத்தால் அவன் உலகம் முனிசிபாலிட்டி ஆகும். ஒருவர் மனத்தின் விசாலத்தைப் பொருத்து அவர் உலகத்தின் அளவு நிர்ணயிக்கப்படும்.

மனிதன் தன்னை உடலாகக் கண்டால் அவனுக்கு உழைப்பு மட்டுமே உரியது; உணர்வாகக் கண்டால் உறவே அவனுக்கு உயிராகும்; மனித மனத்தின் சிந்தனைகளையே தானாக அறிபவன் ஞானம் அவனுக்குரியது; ஆன்மாவாகத் தன்னை அறிபவன் யோகி.

25 வயதில் ஓய்வு பெறவேண்டும் என்று பேசும் இளைஞன் உணர்வால் உயிரற்றவன். அவனுக்குச் சாப்பாடு முக்கியம், சௌகரியம் முக்கியம், வெளியில் போய் உள்ளே வந்தால் மனைவி காத்திருக்க வேண்டும். தம்பி இரவு 12 மணிக்கு மேல் ஆபத்தான சூழ்நிலைக்கு போனவன் திரும்ப வரவில்லை எனில் போய்ப் பார்க்க முடியாதவன். பெருஞ்செல்வமிருந்தும் 34 வயதுவரை பெண்ணின் திருமணத்தை நினைக்காமல், காஷ்மீர், தாஜ்மஹால் பார்க்கவும், நகரத்தில் அரசியல் நண்பர்களுடன் பொழுதுபோக்கவும் நினைப்பவனுக்கு உடலே பிரதானம். அதன் அசைவுகளும் சந்தோஷமும் முக்கியம். அது போன்றவர்கள் சற்று வசதியான குடும்பத்தில் பிறந்துவிட்டதால் அப்படியிருப்பார்கள். அவர்கள் வாழ்வைச் சீர்தூக்கிப் பார்த்தால், அவர்களுக்கு முக்கியமான நேரங்களில் நடந்தவற்றைக் கருதினால்,

**பலன் சூழ்நிலையால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும்.**

மனத்தின் எண்ணங்களே நாமாவோம் என்பவன் நினைப்பதற்குச் சக்தியுண்டு. அவன் சூழ்நிலைக்குக் கட்டுப்பட வேண்டாம். அவன் சிந்தனை சூழ்நிலையை மாற்றும், சிந்தனை



சிறந்தால் சூழ்நிலையை நிர்ணயிக்கும். தன்னைத் தன் எண்ணங்களுடன் இணைத்துப் பார்ப்பவன் சிந்தனையாளன். சௌகரியத்தை நாடுபவன் மகளுக்குத் திருமணம் செய்ய முடிந்தால், மாப்பிள்ளை அவன் நிலைக்குக் கீழ்ப்பட்டவனாக அமைவான். வேறு வழியில்லை நான் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று என்பான். சிந்தனையை முக்கியமாகக் கருதுபவன் மகளுக்குத் திருமணம் செய்ய முனைந்தால் அவன் நிலைக்குயர்ந்த வரன் அமையும். சூழ்நிலையை மீறிய பலன் ஏற்படுவது அவனது மனத்தின் திறத்தால். நாம் எதனுடன் நம்மை இணைத்துக் கொள்கிறோமோ அது நம்மை நிர்ணயிக்கும். உடலோடு நாம் இணைந்தால் உடல் நிர்ணயிக்கும். அதாவது உடல் அடிமைப்படும். மனத்தோடு இணைந்தால் மனம் வாழ்வை அடிமைப்படுத்தும்.

ஒரே மாதிரியான இரு இளைஞர்கள் பெரும் வித்தியாசமான வேலைகளில் சேர்வதும், அதிக வித்தியாசமான இடங்களில் திருமணம் செய்து கொள்வதும் உண்டு. காரணம்,

- ஒருவர் தம்மை உயர்வுக்குரியவர் என நினைக்கிறார்.
- அடுத்தவர் தமக்கு உயர்வில்லை என முடிவு செய்திருக்கிறார்.

நாம் எதை நமக்குண்டு என முடிவு செய்கிறோமோ அது நமக்குப் பெரும்பாலும் கிடைக்கும்.

படித்தவன் சிந்திப்பான். சிந்தனை சிறந்தால் அது அவனை ஆட்கொள்ளும். அந்த நேரம் உடலும் உணர்வும் மறந்து போகும், இரண்டாம்பட்சமாகும். அப்படிப்பட்டவனுக்கு ஒரு வியாதி வந்தால் உடலில் பயம் எழாது. யோசனை செய்வான். மருந்து சாப்பிடுவான். டாக்டர் இந்த வியாதி இப்படித்தான் ஒன்றும் செய்யமுடியாது. குணமாக 6 மாதமாகும் என்றால், டாக்டர் சொல்வதை புறக்கணித்துவிட்டு என்ன செய்யலாம் என நினைப்பான்.

உடலசைவுகளே முக்கியம் என்பவன் வியாதி வந்தவுடன் பயப்படுவான். உடல் நடுங்கும். செய்வதறியாது திகைப்பான். டாக்டரிடம் போக வேண்டும் என இதுபோன்றவர்க்கு அநேகமாகத் தோன்றாது. உடலே முக்கியமானது என நினைத்ததால், அதற்கே பங்கம் வந்துவிட்டதாகத் தோன்றும். ஏதோ பெரிய விபத்து வந்துவிட்டதைப்போல் வீடு முழுவதும் அலறும்.

உடல் மனத்தை நிர்ணயிக்கும் பாணி இதுவேயாகும்.

- ஆன்மாவே முக்கியம் என்பவர் உடலையும், மனத்தையும் புறக்கணிப்பார்.
- இறைவனே முக்கியம் என்பவர் அதற்குரிய அறிகுறிகளைக் கண்டு ஆன்மாவையும் புறக்கணிப்பார். பிள்ளையைக் கறி சமைத்துக் கொடு என சிவனடியார் கேட்பது சிவபெருமானே கேட்பது என்று நினைத்தவர்க்கு உடலில்லை, உயிரில்லை, மனத்தின் எண்ண அலைகளில்லை, ஆத்மாவுக்குரிய மோட்சம் நினைவில்லை.
- அன்னையே முக்கியம், வாழ்வில் இறைவனே முக்கியம் என்பவர் அடுத்தது என்ன, அங்கு என்ன ஆனந்தம் எழும், எப்படி நாம் சரணாகதியை இப்பொழுது பூர்த்தி செய்யலாம் என்ற கருத்து சந்தோஷமாக எழும்.

❊ ❊ ❊

*தொடரும்....*

**ஜீவிய மணி**

புலன்களின் உறைவிடம் மூளை.



## இம்மாதச் செய்தி

**திட்டு அதிர்ஷ்டத்திற்கு டிரான்ஸ்பர் ஆர்டர்.**

**திட்டுபவருடைய அதிர்ஷ்டம் திட்டைப் பெறுபவரிடம் உடனே போய்ச் சேரும்.**

## லைப் டிவைன் கர்மயோகி

## XI. Delight of Existence: The Problem

**Brahman is pure Existence.** *Page No. 90*
**Brahman is Sat.** *Para No. 1*
**It is the absolute beginning.**
**It is the end.**
**It is the continent of things.**
**It is a self-consciousness.**
**Its self-consciousness is inherent.**
**Its self-consciousness is inseparable from its being.**
**It throws itself out.**
**It is a force of movement of consciousness.**
**This force creates movement.**
**That movement is creative.**
**It creates forces, forms and worlds.**
**We may accept all the above ideas.**
**Still our question is unanswered.**
**"Why should Brahman create these worlds?" is the question.**
**Brahman is perfect.**
**It is absolute.**
**It is infinite.**
**It needs nothing.**



## 11. ஆனந்தம் - கேள்வி

**பிரம்மம் என்பது தூய்மையான சத்.**
**சத் என்பதே பிரம்மம்.**
**அதுவே ஆதி, ஆரம்பம்.**
**அதுவே முடிவு.**
**அதுவே அனைத்தையும் உட்கொண்டது.**
**பிரம்மம் சுயமான ஜீவியம்.**
**அதன் சுய ஜீவியம் அதனுடன் பிறந்தது.**
**அதன் சுய ஜீவியம் அதன் ஜீவனிலிருந்து பிரிக்க முடியாதது.**
**பிரம்மம் தன்னை வெளிப்படுத்துகிறது.**
**அது ஜீவியத்தின் சலன புத்தி.**
**சக்தி சலனத்தை எழுப்புகிறது.**
**அச்சலனம் ஜீவனுள்ளது.**
**சக்தி, ரூபம், லோகங்களைச் சலனம் சிருஷ்டிக்கிறது.**
**மேற்சொன்ன அத்தனையையும் நாம் ஏற்கலாம்.**
**ஆரம்பக் கேள்விக்குப் பதிலில்லை.**
**ஏன் பிரம்மம் உலகை சிருஷ்டிக்க வேண்டும் என்பது கேள்வி.**
**பிரம்மம் குறைவற்ற நிறைவுடையது.**
**அது பிரம்மம்.**
**அது அனந்தம்.**
**அதற்கு எதுவும் தேவையில்லை.**

**It desires nothing.**
**It throws our force of consciousness.**
**It creates worlds of forms.**
**Why should that Brahman do this?**
**There is a solution.**
**Let us put it aside.**
**It says Brahman is compelled to create.**
**It is compelled to create by its own forces.**
**They are forces of nature.**
**Nature has potentialities of movement.**
**It has the formation to move into forms.**
**Brahman is compelled by its own potentiality.**
**We reject such a solution.**
**Brahman has this potentiality.**
**It is true.**
**Brahman is not limited by this potentiality.**
**It is neither bound by it nor compelled by it.**
**Brahman is free; free in all senses of the term.**
**Brahman is free to move.**
**It is free to remain still, eternally still.**

**It throws itself into forms.**
**It retains the potentiality of form itself.**
**Still, it indulges its power of movement.**
**It is a power of formation.**



**எதற்கும் பிரம்மம் ஆசைப்படுவதில்லை.**
**ஜீவிய சக்தியைப் பிரம்மம் வெளிப்படுத்துகிறது.**
**ரூப லோகங்களை அது சிருஷ்டிக்கிறது.**
**அப்படிப்பட்ட பிரம்மம் இப்படிப்பட்ட சிருஷ்டியை சிருஷ்டிப்பது ஏன்?**
**வேறொரு பதிலுண்டு.**
**அதை நாம் ஏற்க வேண்டாம்.**
**பிரம்மத்திற்கு சிருஷ்டிக்கும் நிர்ப்பந்தம் உண்டு என அது கூறுகிறது.**
**தன் சக்தியால் அது நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறது.**
**அவை இயற்கையின் சக்திகள்.**
**சலனம் இயற்கைக்கு இயல்பானது.**
**ரூபங்களைச் சிருஷ்டிக்கும் திறனுடையது இயற்கை.**
**பிரம்மம் தன் இயல்பால் நிர்ப்பந்திக்கப்படுகிறது.**
**இந்த முடிவை நாம் ஏற்க முடியாது.**
**இத்திறமை பிரம்மத்திற்குண்டு.**
**இது உண்மை.**
**இத்திறமையே முடிவல்ல.**
**இத்திறமை பிரம்மத்தைக் கட்டுப்படுத்தாது. நிர்ப்பந்தப்படுத்தவும் முடியாது.**
**பிரம்மம் சுதந்திரமானது. எல்லா வகையிலும் சுதந்திரமானது.**
**சலனத்தை எழுப்பும் சுதந்திரம் பிரம்மத்திற்குண்டு.**
**அசையாமலிருக்கவும் பிரம்மம் சுதந்திரமுடையது. காலத்திற்கு அசைய வேண்டியதில்லை.**

**பிரம்மம் ரூபத்தை ஏற்கிறது.**
**ரூபத்தை ஏற்கும் திறன் பிரம்மத்திற்குண்டு.**
**சலனத்தை எழுப்பும் திறனை பிரம்மம் அனுபவிக்கிறது.**

**For what reason does Brahman do so?**

**It can only be for one reason.**

**It is for delight.**

*Page No. 90*

*Para No. 2*

**The Existence is primary.**

**It is also the ultimate and eternal Existence.**

**The Vedantins saw that.**

**It is not a bare existence.**

**Nor is it a mere conscious existence.**

**Its consciousness is not crude.**

**It is not a mere force or power.**

**But it is a conscious existence of bliss.**

**Its term is bliss.**

**The term of consciousness is bliss.**

**Existence is absolute.**

**But there can be no nothingness.**

**There can be no night of inconscience.**

**There can be no deficiency.**

**In other words, the Force cannot fail.**

**There can be no failure of Force.**

**If there is nothingness, night of inconscience, deficiency, failure of Force, Brahman cannot be absolute.**

**So also, there can be no suffering.**

**There can be no negation of delight.**

**Existence is conscious and absolute.**

**It is illimitable bliss.**



**அது ரூபம் பெறும் திறன்.**

**என்ன காரணத்திற்காக பிரம்மம் இதைச் செய்கிறது?**

**அதற்கு ஒரேயொரு காரணம் தானிருக்கலாம்.**

**அது ஆனந்தமாகும்.**

**சத் என்பது அடிப்படை.**

**சத்தே முடிவானதும் கூட, நிரந்தரமானதுமாகும்.**

**வேதாந்த ரிஷிகளுக்கு அது நிதர்சனமாயிற்று.**

**சத் வறண்டதன்று.**

**உயிர் மட்டும் உள்ளதுமில்லை.**

**அதன் ஜீவியம் மட்டமானதன்று.**

**வெறும் சக்தி மட்டும் உள்ளதுமில்லை.**

**பிரம்மம் ஜீவனுள்ள சத் என்பதுடன் ஆனந்தமுமாகும்.**

**ஆனந்தம் பிரம்மத்தின் அம்சம்.**

**ஜீவியத்தின் அம்சமும் ஆனந்தம்.**

**சத் என்பது பிரம்மம்.**

**ஆனால் இல்லை என்பது இருக்க முடியாது.**

**ஜடமான இருள் என்பதுமில்லை.**

**குறையிருக்காது.**

**சக்தி தவறாது என்பதே இதன் பொருள்.**

**சக்தி என்றால் அது தவறக் கூடியதில்லை.**

**சூன்யமிருந்தால், ஜடமான இருள் உண்டு என்றால், குறை உண்மை ஆனால், சக்தி தவறும் என்றால் பிரம்மம் பிரம்மமாக இருக்க முடியாது.**

**அதேபோல் துன்பமிருக்க முடியாது.**

**ஆனந்தத்திற்கு எதிரானது இல்லை.**

**சித்தின் சத் பிரம்மம்.**

**It is the bliss of conscious existence.**

**Both describe the same thing.**

**All illimitableness is pure delight.**

**All infinity is pure delight.**

**All absoluteness is pure delight.**

**Our humanity is relative.**

**That has the same experience.**

**Dissatisfaction means limit.**

**It means it is an obstacle.**

**Get what is denied, you will be satisfied.**

**Thus, we overcome the limit.**

**In this way, we remove the obstacle.**

**Our original being is the absolute.**

**It is in full possession of consciousness.**

**That consciousness is infinite and illimitable.**

**It possesses its self-power.**

**It self-possession is Self-delight.**

**The relation does not have that self-possession.**

**But it tries to increase its self-possession.**

**Increasing self-possession is increasing satisfaction.**

**It leads to delight.**

*contd...*

❊ ❊ ❊



**அது அனந்தமான ஆனந்தம்.**

**இது ஜீவனுள்ள சத்தின் ஆனந்தம்.**

**இரண்டும் கூறுவது ஒன்றே.**

**அளவு அழிந்தால் ஆனந்தம் எழும்.**

**அனந்தம் ஆனந்தம்.**

**பிரம்மம் ஆனந்தம்.**

**மனித குலம் சிருஷ்டி.**

**அதன் அனுபவமும் அதுவே.**

**அதிருப்தி என்றால் அளவு.**

**அளவு என்பது தடை.**

**இல்லை என்பது கிடைப்பது திருப்தி.**

**நாம் இவ்வழித் தடையைத் தாண்டி வருகிறோம்.**

**தடையை நீக்க நாம் இவ்வழியைப் பின்பற்றுகிறோம்.**

**நம் ஆதி பிரம்மம்.**

**பிரம்மத்திற்கு ஜீவியம் உண்டு.**

**அஜ்ஜீவியம் அனந்தமானது, அளவில்லாதது.**

**தன் சுய சக்தியைப் பெற்றது.**

**சுயசக்தி என்பது சுயமான ஆனந்தம்.**

**சிருஷ்டியில் பொருள்கட்கு இந்தச் சுய ஆனந்தமில்லை.**

**ஆனால் சுய ஆனந்தம் பெறவும், அதிகரிக்கவும் அது முயல்கிறது.**

**சுயசக்தி அதிகரித்தால் திருப்தி அதிகரிக்கும்.**

**அதன் வழி ஆனந்தம் வரும்.**

❊ ❊ ❊

*தொடரும்...*

## அன்பரும் - நண்பரும்

அன்பர் - சென்ற ஆண்டு நாமிருவரும் பேசியது உங்களுக்கு நினைவிருக்கும். இப்பொழுது ஓராண்டு ஆயிற்று. மீண்டும் உங்களிடம் ஆலோசனை கேட்க விரும்புகிறேன். உங்களுக்குச் சுருக்கமாகச் சொன்னால் நினைவு வரும் என நினைக்கிறேன்.

என் கணவர் சிறு வேலையிலிருக்கிறார். கடனில்லை என்றாலும், சிறு வருமானம். வீடு கட்டியதே பெரிய பாடு. அக்கடன் அடைய நாளாகும். எனக்கு என் நிலைமை தெரியும் என்பதால் பெரிய ஆசைகளில்லை. இல்லை என்றால் இல்லவே இல்லை எனப் பொருளில்லை. என் உடன் பிறந்தவர்கள் அனைவரும் பெரிய சம்பளத்திலிருப்பதால் அனைவரும் கார் வைத்திருக்கிறார்கள். அதனால் நானும் ஆசைப்பட்டேன். சென்ற ஆண்டு நாமிருவரும் அதைப் பற்றிப் பேசிய பொழுது **"என் நிலைமைக்கு மீறிய ஆசை தவறு என்பதை நீங்கள் மனத்தால் மட்டுமன்று, உணர்வு பூர்வமாக ஏற்பது அறிவுடைமை"** என்று கூறினீர்கள். அது எனக்குச் சரி எனப்பட்டது. ஏற்றுக் கொள்ள முடிவு செய்தேன். அறிவு ஏற்கிறது. உணர்ச்சி மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறது. கொஞ்ச நாள் போராட்டத்திற்குப் பின் ஒரு நாள் உணர்வு சம்மதப்பட்டதை வந்து உங்களிடம் சொன்னேன். நாம் பேசிக் கொண்டிருக்கும் பொழுது என் தகப்பனாரிடமிருந்து இங்கு வருவதாகப் போன் வந்து வீட்டிற்குப் போனபொழுது அவர் என் உடன் பிறந்தவர்கள் சேர்ந்து எனக்கு மட்டும் காரில்லாமல் இருக்கக் கூடாது எனக் கார் வாங்க முடிவு



செய்ததையும் அதை அவர் மறுத்து "உங்கள் பரிசை மாப்பிள்ளை ஏற்கமாட்டார். என் மகளே ஏற்க மாட்டாள். நானே வாங்கிக் கொடுக்கிறேன். அதற்கு ஆட்சேபணை இருக்காது" என்று கூறியதையும் என்னிடம் கூறினார்.

நண்பர் - உங்களுக்குப் பிரச்சினை கார் இல்லையே. Attitude நோக்கம் தானே.

அன்பர் - அதன் பிறகுதான் எனக்குப் பிரச்சினை என்ன என்று தோன்றியது. என் வீட்டுக்காரர் எதையும் எவரிடமிருந்தும் பரிசாகப் பெற்றுக்கொள்ள சம்மதிக்க மாட்டார். அவர் இலட்சியம் என் காருக்குத் தடை. நான் அவரைக் கேட்டுப் பார்க்கவும் முடியாது. ஆரம்ப நாளிலிருந்து இது தெரிந்த விஷயம். மேலே என்ன செய்வது எனத் தெரியவில்லை. தகப்பனார் "நீ சொல்லும்பொழுது நான் காருடன் வருகிறேன்" என்று கூறிப் போய்விட்டார்.

நண்பர் - எனக்கு எல்லா விவரங்களும் நன்றாக நினைவிருக்கின்றன. பிரச்சினை காரில்லை என்று தெரிந்தவுடன் அது தீர்ந்துவிட்டது. இப்பொழுது பிரச்சினை வீட்டுக்காரரில்லை என்று புரியவேண்டும்.

அன்பர் - அவர் மட்டுமே பிரச்சினை. வேறென்ன என்று எனக்குத் தெரியவில்லை. 3 நாள் பிரார்த்தனை செய்தால் பலிக்குமா?

நண்பர் - செய்தால் மனம் அமைதியாகும். வேறு பல காரியங்கள் முடியும். கார் வாராது.

அன்பர் - 3 நாள் பிரார்த்தனை தவறியதே இல்லையே.

நண்பர் - அது தவறாது. ஒரு வேளை 3 நாள் பிரார்த்தனைக்குப் பின் என்ன செய்யவேண்டும் என்று தெரியலாம்.

அன்பர் - அது உங்களுக்குத் தெரியுமா?

நண்பர் - நாம் நெடுநாளாகப் பழகுகிறோமல்லவா?

அன்பர் - உங்களுக்குத் தெரியும் என்றால் சொல்லக் கூடாதா?

நண்பர் - சொன்னால் புரியாது. புரிந்தால் தெளிவு ஏற்படும். கார் வாராது.

அன்பர் - இரண்டாம் முறையாகக் கார் வாராது என்று சொல்கிறீர்களே.

நண்பர் - அப்படியானால் உடனே வரும் என்று அர்த்தம்.

அன்பர் - நேரடியாகப் பேசினால் புரியும். புதிர் புரியாது.

நண்பர் - போனமாதம் உங்கள் அக்கா மகன் அட்மிஷனுக்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்?

அன்பர் - அக்கா நான் சொன்னால் ஏற்கமாட்டார்கள். அவர்களுக்குச் சொந்தமாகப் புரியவேண்டும் என்றேன். நானும் அப்படியா?

நண்பர் - உங்களுக்குச் சொல்வது எனக்கு முடியும். எனக்கே நான் சொல்ல முடியாமல் காரியம் பாக்கியாக இருக்கிறதே.

அன்பர் - உங்களுக்கு அது முக்கியமில்லை. அதனால் பாக்கியாக இருக்கிறது.

நண்பர் - இத்தனை வருடமாக இதுபோல் எத்தனை காரியம் வந்துள்ளன. நீங்களே நினைத்துப் பார்க்கக் கூடாதா?



அன்பர் - நானும் என் வீட்டுக்காரரும் அடிக்கடி வாக்குவாதம் செய்வதைச் சொல்கிறீர்களா?

நண்பர் - பிரியமானவர்களும் சண்டை போடாமலிருந்தால் நல்லது. சண்டை போட்டால் கார் உடனே வரும்.

அன்பர் - கார் வரும் என்றால் சண்டையே போடத் தயார்.

நண்பர் - 5 நிமிஷம் அமைதியானால், தெளிவு ஏற்படும்.

அன்பர் - நானும் என் வீட்டுக்காரர்போல் வாங்கிக் கொள்ளாதவள் என்கிறீர்களா?

நண்பர் - உங்கள் தகப்பனாரே அதைச் சொன்னாரே.

அன்பர் - என் தகப்பனார்தானே தருகிறார். எனக்கு ஆட்சேபணை இல்லையே.

நண்பர் - குணம் அடிப்படையில் அதுவே என்பதால் தடை எழும்.

அன்பர் - நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? நானும் என் கணவர் போன்ற மனப்பான்மையுடையவள் என்பதால் என் கணவர் தடையாக இருப்பார் எனப் புரிய வேண்டுமா?

நண்பர் - "என் குணம் மாறினால் - பரிசு பெறுவது தவறு என்ற கருத்து - என் கணவர் தடை கூறமாட்டார்" என்று உங்கள் மனம் ஏற்குமா? உணர்வும் ஏற்குமா?

அன்பர் - அதை ஏற்கிறேன். இரண்டு, மூன்று நாள் கழித்து வருகிறேன்.

❖❖❖

மறுநாள் அன்பரிடமிருந்து நண்பருக்குப் போன் வந்தது. அவர் வீட்டிற்குப் போனபொழுது அவருடைய தகப்பனார் வேறு விஷயமாக வந்திருந்தார். கணவருடன் T.Vஇல் நாடகம் பார்க்கும்பொழுது ஒரு இலட்சியவாதி மாப்பிள்ளை கார் பரிசு பெறமாட்டேன் என வைராக்கியமாக மறுக்கும் கதை அது. அதைப் பார்த்த கணவர் கதையை ரசித்தார். இலட்சியவாதியைப் பாராட்டினார். மனைவிக்கு மனம் இடிந்துவிட்டது. T.V. நாடகம் தன் காரியம் முடியாது எனக் கூறுகிறது என்று நினைத்து "மனதை மாற்றிக் கொண்டு 3 நாள் பிரார்த்தனை செய்யலாம்" என்று நினைத்துக் கொண்டு உள்ளே போனவுடன் ஹாலில் ஆரவாரமாகச் சிரிப்பு கேட்டு ஓடி வந்து பார்த்தார். இலட்சியவாதியைப் பாராட்டிய மாப்பிள்ளை மாமனாரிடம், "கதை இருக்கட்டும், எனக்குக் கார் வரும் என்றால் நான் வாங்கிக் கொள்ளத் தயார்" என்று கூறியதை மாமனாரால் நம்ப முடியவில்லை. உடனே இருவரும் சேர்ந்து சிரித்தனர். கார் வந்துவிட்டது.

அன்பர் - எனக்கு இரண்டு விளக்கங்கள் தேவை. ஒன்று சென்ற ஆண்டு நடந்தது. இரண்டு இந்த ஆண்டு நடந்தது.

நண்பர் - என்ன விளக்கம் தேவை? விளக்கம் கேள்வியிலேயே இருக்குமே.

அன்பர் - ஆசை தவறு என்று உணர்ந்தவுடன், பூர்த்தியானது ஆசை. அது எப்படி? ஆசை தவறில்லை என்றாகிறதே.

நண்பர் - ஆசை யோகத்திற்கு மட்டுமன்று, வாழ்க்கைக்கும் தவறு.

அன்பர் - ஏன் பூர்த்தியாயிற்று? யார் பூர்த்தி செய்தது? அன்னை தானே?

நண்பர் - அன்னை நம் எல்லோர் ஆசைகளையும் பூர்த்தி செய்கிறார். அதனால் ஆசை நல்லது என அன்னை கூறுவதாகாது. தவறு, நிலைமைக்கு மீறியது என்பதால் தவறு என்பதை மனம் ஏற்பது தவறு. தவறு மனத்தை விட்டுப் போனவுடன் receptivity ஏற்புத்திறன் அதிகரிக்கிறது. டென்ஷன் போய் அமைதி வந்தவுடன் அன்னை செயல்படுகிறார்.



அன்பர் - ஆசை தவறில்லையா?

நண்பர் - ஆசை சரியில்லை. என்றாலும் அது பூர்த்தியாகும், படபடப்புச் சரியில்லை, சரியேயில்லை.

அன்பர் - எதிர்பாராமல் தகப்பனார் எடுத்த முடிவு ஆச்சரியமாக இருந்தது. அவருக்குக் காரில்லை. எனக்குப் பரிசாகத் தருகிறார். ஏன் ஓராண்டு தாமதமாயிற்று?

நண்பர் - மனம் உங்களுக்கு மாறியிராவிட்டால், அது நடந்தேயிருக்காது. மனம் மாறினால் உடனே நடக்கும்.

அன்பர் - என் கணவருக்குத் தகப்பனார் கூறியது தெரியாது. எப்படி அவரே காரைப் பற்றிப் பேசினார்? ஏன் பேசினார் எனத் தெரியவில்லை.

நண்பர் - அது நடந்த வேகம் குறிப்பிடத்தக்கது. உங்கள் மனத்திலுள்ள எண்ணம் வெளிப்படாததால், அது கணவர் மூலம் வெளிப்படுகிறது.

அன்பர் - எல்லோர் மனமும் ஒரே மனம் என அன்னை கூறியது தெரியும். அது இப்படியும் செயல்படுமா?

நண்பர் - இது - silent will - ஒரு நாளைக்குப் பலமுறை நடக்கிறது. நாம் கவனிப்பதில்லை. இப்பொழுது கார் என்பதால் கவனிக்கிறோம்.

அன்பர் - அன்னையிடம் வந்தவுடன் எனக்கு silent will புரியவில்லை. ஆச்சரியமாக இருக்கிறது. அப்பொழுது நான் சிரத்தையுடன் கவனித்தது நினைவுக்கு வருகிறது. எதிரில் உள்ளவர் புத்தகத்தை மூடிவிட்டுப் பேச்சில் கலந்து கொள்ள வேண்டும் என நினைத்தேன். உடனே மூடிவிட்டார். ஒருமுறை கடைக்குப் போய் ஐஸ்கிரீம் சாப்பிட நினைத்தேன். சற்று நேரத்தில் நானிருந்த இடத்திற்கே ஐஸ்கிரீம் வந்துவிட்டது.

நண்பர் - இதைப் பலமுறை பார்க்காத அன்பரில்லை. கார் விஷயத்தில் கவனிப்பதைப்போல் மற்ற விஷயத்தில் கவனிப்பதில்லை.

அன்பர் - ஒரு வருஷம் தாமதமானது ஒரு நாளில் நடந்தது எப்படி?

நண்பர் - காலம் கணக்கில்லை. மனமாற்றம் முக்கியம்.

அன்பர் - நான் முயன்று மனம் மாறவில்லையே.

நண்பர் - மாற வேண்டும் என முடிவு செய்ததின் பலனிது.

அன்பர் - மனம் மாறினால் எந்த விஷயமும் இப்படி நடக்குமா?

நண்பர் - மாமியார், மருமகள் விஷயத்தில் இதன் பலன் ஆச்சரியமாகத் தெரியும். மருமகள் மாமியாரைச் சரியாக நடத்தாவிட்டாலும், மாமியார் கொடுமை செய்தாலும், இடர்ப்படுபவர் மனம் மாற முன் வரவேண்டும்.

அன்பர் - எனக்குக் கூறியதே (நானும் என் கணவரும் ஒன்று) அவர்கட்குச் சொன்னால் கொடுமைக்கார மாமியாருக்கும் மருமகளுக்கும் ஒரே மனம் என்றாகும்.



நண்பர் - அதை ஏற்றுக் கொள்ள முடியுமா? காரைவிட மாமியார் விஷயம் கடினம். அதை ஒரு மருமகள் செய்தாள். 2 நாள் மாமியார் தங்கமாக இருந்தார். மருமகளுக்குத் தானும் மாமியாரும் ஒன்று என்று நினைக்கவே கசப்பாக இருந்தது. மீண்டும் பழைய நிலை வந்தது.

அன்பர் - நிரந்தரமாக மாறிய மாமியார் தெரியுமா?

நண்பர் - நிரந்தரமாக மாறிய வாயாடி மனைவி தெரியும். மாமியார் தெரியாது.

அன்பர் - பணம் வந்தால் மாமியார், மருமகள் எல்லோரும் மாறுவார்கள்.

நண்பர் - சோதனை செய்தால் தெரியும். எனக்குச் சொந்த அனுபவமில்லை. நிச்சயமாக அன்னையால் மாறிய மாமியார், மருமகள் அநேகம் பேர்.

❖❖❖

அன்பர் - சண்டை போட்டால் கார் வரும் என்பது என்ன அர்த்தம்?

நண்பர் - கார் என்பது இங்கே நீங்கள் நினைப்பது பூர்த்தியாவது. சண்டை என்பது பிணக்கு. பிணக்கு வெறுப்பால் ஏற்பட்டால் சண்டை பிளவை ஏற்படுத்தும். பிணக்கு பிரியத்தால் ஏற்பட்டால் சண்டை பிரியத்தை வளர்க்கும்.

அன்பர் - பிணக்கால், பிரியம் வளருமா?

நண்பர் - பிரியத்தைவிட புத்தி குறைவாக இருக்கலாம், அதிகமாக இருக்கலாம். புத்தி அதிகமாக இருந்தால் பிரியம்

பிணக்காகாது. பிரியத்தைவிட புத்தி குறைவானால் பிணக்கு எழும்.

அன்பர் - எனக்குப் புத்தியில்லை என்கிறீர்களா? என் கணவருக்குப் புத்தி மட்டு என்று கூறுகிறீர்களா?

நண்பர் - புத்தியைவிடப் பிரியம், இலட்சியம் அதிகமாக இருப்பதால் அவை சுமுகமாகச் செயல்பட முடியவில்லை.

அன்பர் - புத்தியில்லாவிட்டால், சண்டை போட்டால் கார் வருமா?

நண்பர் - பிரியமிருப்பதால், பிணக்கும் பிரியத்தை வளர்க்கும்.

அன்பர் - பிணக்கு சிறியது, பிரியம் பெரியது என்பது உண்மை தானே. அதனால் சண்டை எப்படி காரைக் கொண்டு வரும்?

நண்பர் - எதைச் செய்தாலும் வளர்வது அடிப்படை. இங்கு அடிப்படை பிரியம். பிரியமான குடும்பத்தில் எது நடந்தாலும் பிரியம் வளரும். பூசலான குடும்பத்தில் எது நடந்தாலும் சண்டையில் முடியும்.

அன்பர் - அது சரி. நாங்கள் சண்டை போட்டால் பிரியம் வளருமா?

நண்பர் - ஆம்.

அன்பர் - அது எங்குப் போய் முடியும்?

நண்பர் - பிரியம் வளர்வது என்பது ஒருவர் மற்றவரை அதிகமாக ஏற்பதாகும். உங்களைக் கணவர் அதிகமாக ஏற்றால் வறட்டு இலட்சியம் பின் வாங்கி, உங்கள் ஆசை பூர்த்தியாகும்.



அன்பர் - அவரது இலட்சியம் வறட்டு இலட்சியமா? ஆமாம். பரிசு என்பது பணமாக வந்தால், ஆதாயத்திற்காக அளிக்கப்பட்டால் வாங்கிக் கொள்ள வேண்டாம். பிரியத்திற்காக என் வீட்டார் அளிப்பதையும் பரிசு என்று கூறுவது சரியாகாதுதான்.

நண்பர் - கார் வரும் என்றாலும் சண்டை போடக் கூடாது.

அன்பர் - மீண்டும் தலைகீழே பேசுகிறீர்களே.

நண்பர் - சண்டை காரைக் கொண்டு வரும் என்ற உண்மையை விட, சண்டையில்லாமலிருப்பது நல்லது என்பது பெரிய உண்மை.

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இல்லாததை நம்புவது மூட நம்பிக்கை. இருப்பதை நம்ப மறுப்பதும், அழிய மறுப்பதை ஏற்க மறுப்பதும் மூட நம்பிக்கை. ஒரு முறை கண்ட அனுபவத்தை முடிவாகக் கொள்ளும் அறிவீனம் ஒன்று; எதிர்காலத்தை ஏற்க மறுக்கும் அறிவீனம் அடுத்தது.

*இல்லாததை நம்புவதும், இருப்பதை நம்ப மறுப்பதும் மூடநம்பிக்கை.*

“Agenda”

## A measure of sincerity - the power to express what is received

**ஆத்மாவின் உண்மை - ஆண்டவனிடமிருந்து பெற்றதைப் பிறரிடம் வெளிப்படுத்துவது**

ஆண்டவன் அளிப்பது அருள். நாம் கடலில் குளிக்கப் போனாலும், கடையில் மிட்டாய் வாங்கப் போனாலும், மேஜை வாங்கினாலும், சமையல் செய்தாலும், பெறுவது மேஜையோ, மிட்டாயோ, நீச்சலோ அன்று. நீச்சல் என்ற ரூபத்தில் ஆண்டவன் கொடுப்பது அருள். வருவது மேஜையில்லை அருள், மிட்டாயில்லை அருள். நம்முள் அருளாக நுழைவது, வெளியில் நம்மை விட்டு அன்பாகச் செல்கிறது.

- அருளுக்கும் அன்பிற்கும் இடையில் உள்ளது மனித சுபாவம்.
- மனித சுபாவம் தெய்வச் சுபாவமாக இருந்தால் மேஜை அருளாகும், அதை மற்றவருக்கு அன்பாக அளிப்போம்.
- மனத்திற்கு நினைவிருந்தாலும் அது மனத்தை insincere அசுத்தப்படுத்தும் என்கிறார் அன்னை.
- மனிதனுக்குக் கடமைகள் உண்டு.
- விலங்குக்குத் தேவைகள் உண்டு.
- தெய்வத்திற்கு சக்தியுண்டு.
- தலைவருக்குப் பொறுப்புண்டு.
- தொண்டருக்குச் சேவையுண்டு.



- சத்திய ஜீவனுக்குக் கடமைகள் இல்லை, தேவைகள் இல்லை, சக்தியை வெளிப்படுத்தும் அவசியமில்லை, பொறுப்போ, சேவையோ மற்ற எதுவும் இல்லை.

**இருப்பதே அவன் இலட்சியம்.**

**சத்தியமாக இருப்பது அவன் ஜீவியம்.**

**இருப்பது இறைவனின் இன்பம் என்பது சத்தியஜீவனின் பிறப்புரிமை.**

**சத்திய ஜீவன் பிரம்மத்தோடு தொடர்புடையவன்.**

**சத்தியம் ஜீவியம் பெற்றதால் அவன் சத்திய ஜீவனாகிறான்.**

**சத் என்ற அகத்தின் புறம் சத்தியம்.**

**ஜீவன் பெற்றது ஜீவியம்.**

**சத் என்பதே ஜீவன்.**

**சத்திய ஜீவன் சத் என்ற சத்தியமாகவும், ஜீவன் என்ற ஜீவியமாகவுமானவன்.**

❊ ❊ ❊

### ஸ்ரீ அரவிந்த சுடர்

குழந்தைக்கு நாம் கொடுக்கும் பொருளின் மதிப்பு தெரியாததுபோல், மனிதனுக்கு இறைவன் கொடுப்பதின் மதிப்புத் தெரிவதில்லை. அதனால் அவனால் நன்றி சொல்ல முடியவில்லை.

*இறைவனுக்கு மனிதன் குழந்தை.*

"அன்பர் உரை"

## பரநலம் பரமனின் நலம்

*(சென்னை மாம்பலம் தியான மையத்தில் **9.6.2002** அன்று திருமதி விஜயா நாராயணன் நிகழ்த்திய உரை)*

பரநலம் பரமனின் நலம் என்பதைச் சுயநலம் எப்படிப் பரநலமாவது என்று மாற்றிக் கூறலாம். 8, 10 வயதுக் குழந்தைகட்கு அவர்கள் விளையாட்டு தெரியும். மற்ற அவர்கள் விஷயங்கள் தெரியும். வேறு விஷயங்கள் வீட்டில் நடப்பது தெரியாது. சூதாடுபவனுக்கும், பெண்களை நாடுபவனுக்கும் வீடு என்று ஒன்று இருப்பது தெரியாது, ஏனெனில் அவன் சூதாட்டத்தில் உலகை மறந்திருப்பான். தகப்பனார் சுயநலமானால், அவருக்கு அவர் விஷயங்கள் சிறியவை கூட மறக்காது. மனைவிக்கோ, குழந்தைகட்கோ உடல்நலம் சரியாக இல்லை, பரீட்சை வருகிறது என்பவை கூட மனதில் படாது. மறந்து செயல்படுவார்.

குழந்தைகள் தெரிய முடியாது என்பதாலும், சூதாடி தன்னைச் சூதாட்டத்தில் இழந்துவிட்டான் என்பதாலும், பிறரை அறியமாட்டார்கள். சுயநலமிக்குப் பிறரையறியும் திறமையே பிறக்கவில்லை. அடுத்தவரும் மனிதராயிற்றே என்ற எண்ணம் இருக்காது. எதிரில் மனிதரிருப்பது கண்ணில் படாது. கண்ணில் பட்டால் மனதில் படாது.

எலக்ஷனில் நேரு ஊர் ஊராகப் போய் பேசும்பொழுது அந்தத் தொகுதி வேட்பாளரை அறிமுகப்படுத்துவார். உத்திரப் பிரதேசத்தில் அப்படி அவர் சுற்றுலா வரும்பொழுது ஒரு தொகுதி வேட்பாளர் மேடைக்கு வரவில்லை. “எங்கே



வேட்பாளர்?” என நேரு கேட்ட பொழுது இது உங்கள் தொகுதி என்றனர். பரநலம் சுயநலமறியாது. சுயநலம் பரநலமாவது, மனம் சத்திய ஜீவியத்தை நோக்கி அடி எடுத்து வைப்பதாகும். சுயநலம் பரநலமாவது அதிர்ஷ்டம். பகவான் ஸ்ரீ அரவிந்தர் சுயநலத்தைக் கண்டிப்பதில்லை. நாம் அதனின்று விலக வேண்டும் என்பார்.

The Life Divineஇல் எல்லா அத்தியாயங்களிலும் முரண்பாடு எனவும், ஜடம் எனவும், அகந்தை எனவும், வேதாந்த ஞானம் எனவும், இருதயச் சமுத்திரம் எனவும் சுயநலத்தின் அடிப்படையான தத்துவத்தைக் கூறுகிறார்.

ஜடம் Matter என்ற அத்தியாயத்தில் ஜடம் உற்பத்தியான வகையை விளக்கி முடிக்கும் கடைசி வரியில் இக்கருத்தைக் கூறுகிறார்.

- ஜடம் என்பது சச்சிதானந்தம்.
- சத் ஆனந்தத்தை உணர சித் மூலம் ஆனந்தமாகவே மாறியது.
- சத், மனம், வாழ்வு மூலம் ஜடமாயிற்று.
- ஜடம் சத் என்ற அகத்தின் புறம்.
- சத் என்ற அகம் ஆன்மா என்ற புறமாயிற்று.
- ஆன்மாவே ஜடம் என்பதால் ஜடம் ஆரம்பத்தில் சத்தாகும்.
- சத் ஆனந்தம் பெற சச்சிதானந்தமாயிற்று.
- கீழுலகில் சத் தலைகீழே மாறி ஜடமாயிற்று.
- அகமான சச்சிதானந்தம் தலைகீழே மாறி புறமான ஜடமாயிற்று.

- ஜடம் சச்சிதானந்தத்தின் ஆனந்தமயமான புறம்.

இது தத்துவம். இது புரியலாம். புரியாமலிருக்கலாம். பெற்றோர், மனைவி, மக்கள், வீடு என்பதை மனதில் வாங்கிக் கொள்ளாத சுயநலமியை நாம் அறிவோம். 1 மாதமாக இருமும் குழந்தை எதிரிலேயே இருந்தாலும் அவன் இருமல் காதில் அவனுக்குப் படாது. சொன்னால், "எல்லாம் சரியாகிவிடும்" என்பான். தனக்கு ஒரு முறை இருமல் வந்தால், டாக்டரிடம் காட்டுவான். எல்லா நண்பர்களிடமும் எப்பொழுதும் கார் இரவல் வாங்குவான். வேலை முடிந்த பிறகு ஓரிரு நாள் வைத்திருப்பதும் உண்டு. பெட்ரோல் போட்டுக் கொடுக்கும் நண்பர்களும் உண்டு. ஆனால் தன் காரை எவரும் கேட்கக் கூடாது, கேட்பது அநாகரீகம் என்பான். பிறர் சொத்து வாங்கும்பொழுது எனக்குப் பாதி நீ பணம் போட்டுக் கடனாக வாங்கிக் கொடு என்பான். அவருக்கே சைக்கிள் ஒரு நாளைக்குக் கொடுக்கமாட்டான். இது போன்ற சுயநலமிகளை நாம் ஏராளமாக அறிவோம்.

- சுயநலமான மனிதன் ஜடம்.
- பரநலமான மனிதன் ஆனந்தமான ஜடம்.

சுயநலம் பரநலமானால், மனம் சத்திய ஜீவியமாகும். காலம், காலத்தைக் கடந்த நிலையையும் கடந்து செல்லும். பரநலம் அதிர்ஷ்டம் என்பதால் சுயநலமி அதை நாடினால், அதுவும் சுயநலத்திற்காகவே நாடுகிறான் எனப் பொருள்.

நமக்கெல்லாம் சுயநலம் உண்டு. சற்று பரநலமும் கலந்திருப்பதுண்டு. நல்லவர்கட்கு அதிகமாக நல்லதிருப்பதுண்டு. முழுச் சுயநலமாக இருப்பவரும் உண்டு. அவர் அன்னையை வழிபட ஆரம்பித்தால்,



- அவருடைய எல்லாப் பிரார்த்தனைகளும் சுயநலமான பிரார்த்தனைகளாக இருக்கும். ஒன்று தவறாமல் பலிக்கும்.
- சுயநலத்திற்குத் திறமை அதிகம் என்பதால், திறமை மூலம் அன்னை அதிகமாகப் பலிப்பார்.
- அன்னை அதிகமாகப் பலிப்பதால், சுயநலம் பரநலமாகி விடாது.
- பரநலத்தின் பிரார்த்தனை சுயநலமான பிரார்த்தனையைவிட அதிகமாகப் பலிக்கும்.
- அதையும் பரநலத்திற்காகச் செய்வதே முறை.
- பரநலம் பரமனின் நலம் என்றறிவது ஞானம்.

மையம் நடத்துபவர்கள், பல நண்பர்களை அன்னைக்கு அறிமுகப்படுத்துபவர்கள் "நான்தான் அன்னை. நான் சொல்வதைக் கேள்" என்று கூறுவதும் உண்டு. இவர்கள் மையமும் சிறப்பாக, சுத்தமாக, மௌனமாக இருப்பதுண்டு. எல்லாப் பிரார்த்தனைகளும் பலிப்பதுண்டு.

- சுயநலமும் அன்னைச் சூழலில் உள்ளவரை பிரார்த்தனை பலிக்கும். பையன் சுயநலமாக இருந்தாலும், பெற்றோர் அவன் நன்றாக இருந்தால் போதும் என்று அவன் சுயநலத்தை ஆதரிப்பதைப்போல், அன்னை அவர் சூழலில் உள்ளவரை சுயநலமியின் பிரார்த்தனையை ஏற்பார்.
- சுயநலம், அன்னைச் சூழலைவிட்டு அகன்றால், அந்த மையத்தில் பிரார்த்தனைகள் பலிக்கா.
- அன்னை, ஸ்ரீ அரவிந்தர் படம் இருளடையும்.

- ❂ மழை அவரால் தடைபடும்.
- ❂ பிரார்த்தனைக்கு எதிரான பலன் வரும்.
- ❂ சமாதி தரிசனம் செய்து திரும்பும்பொழுது சாக்கடையில் விழுந்தேன். அன்னை அருளால் உயிர் பிழைத்தேன் என்ற நிகழ்ச்சி நடக்கும்.
- ❂ சுயநலம் போய் பரநலமானால், பிரார்த்தனை தவறாது பலிக்கும்.
- ❂ சமாதியின் சூழல் வீட்டிலும், மையத்திலும் இருக்கும்.
- ❂ அன்னை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளின்பின் அசம்பாவிதங்கள் நடக்கா.
- ❂ சுயநலமி, சூழலைவிட்டு வந்தபின், அவர் மனதில் அன்னை இருக்கமாட்டார். முகம் கறுத்துவிடும்.

பரநலத்திற்குப் பொறுப்புண்டு, பொய் சொல்லமுடியாது. பிறர் பணத்தைத் தம் பணம்போல் பொறுப்பாக நிர்வாகம் செய்வார்.

- ❂ பரநலமிருந்தால் அவர் செய்யும் காரியம் ஆயிரமாயிரங்கள் மீண்டும் நடக்கும்.
- ❂ பரநலம் சுத்தமான பணம் சம்பாதிக்கும்.
  பணம் வேண்டாம் எனக் கூறினால் போதாது. பணத்தைச் சரியாகச் சம்பாதிக்க முடியாதவன் திறமையில்லாமல் வேண்டாம் என்பது பொருத்தமாகாது.
- ❂ பரநலம் பணம் சம்பாதிக்கும், பெரும்பணம் சம்பாதிக்கும், பரநலத்தின் பணம் பெருகும், அளவு கடந்து பெருகும்.

❊ ❊ ❊



## அன்பர் கடிதம்

ஸ்ரீ அன்னைக்கு நமஸ்காரம். அன்புடன் எழுதும் நன்றிக் கடிதம்.

ஸ்ரீ அன்னைக்குச் சமர்ப்பணம். ஸ்ரீ அன்னை எனக்கு எண்ணற்ற பரிசுகள் கொடுத்துள்ளார்கள். அவற்றுள் சிலவற்றைத் தெரிவிக்க ஆவலாய் உள்ளேன். ஸ்ரீ அன்னை அறிவுத் தெய்வம். என் சுவாசத்தில் கலந்த சுகந்தமான தென்றல். நான் 1998 Sep. மங்கையர் மலரில் ஸ்ரீ அன்னையை அனுப்புதல் என்ற கட்டுரை மூலம் அறிந்தேன். உடனே மங்கையர் மலருக்கு கடிதம் எழுதினேன். அவர்கள் மதர்ஸ் சர்வீஸ் சொஸைட்டி முகவரி கொடுத்தார்கள். நான் 1990லிருந்து தொகுப்பு ஊதியம் மட்டுமே பெற்று வந்தேன். Sep. 98இல் ஸ்ரீ அன்னை அவர்களுக்குச் சம்பளம் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தோம். மூன்று மாதத்தில் 1999 ஜனவரி 1ஆந்தேதியிலிருந்து 9 வருடமாகப் போராடி கிடைக்காத சம்பளம் S.G.T. pay கிடைத்தது அன்னையின் அதிர்ஷ்டம், அருள். ஸ்ரீ அன்னைக்குச் சமர்ப்பணம். ஸ்ரீ அன்னைக்குக் கோடானகோடி நன்றிகள்.

அதே வருடம் 1999 Nov. 3ந்தேதி என் மாமனார் இறைவனடி சேர்ந்தார். அன்று நான் பாத்ரூமில் உயிர் நிலையில் அடிபட்டு உயிருக்குப் போராடினேன். அன்று டாக்டர் மிகவும் கஷ்டம், blood clot ஆகியுள்ளது, எலும்பில் அடிபட்டுள்ளதோ என்னவோ உடனே minor operation செய்யவேண்டும் மிகவும் வீக்கமாக உள்ளது என்று கூறிவிட்டார். மாமியார் வீட்டில் மாமனார் இறந்த வேளை. என் கணவருக்குத் தம் தந்தை இறந்த துக்கம், நான் மனைவி, என்ற துன்பம். நானும் அவரும் ஸ்ரீ அன்னையே காப்பாற்றுங்கள் என்று வேண்டினோம். Mother 's Service Societyக்கு இரவு 10 மணிக்கு

phone செய்தோம். அம்மா, ஸ்ரீ அன்னைக்குச் சமர்ப்பணம் செய்த மலர்களை அடிபட்ட இடத்தில் வைத்துக் கட்டினால் ஸ்ரீ அன்னை குணமாக்குவார் என்றார். அவ்வாறே மனமுருகி மிகுந்த நம்பிக்கையுடன் செய்தேன். பூரண குணம் பெற்றேன். ஸ்ரீ அன்னை என் உயிரைக் காப்பாற்றினார். நன்றி அன்னையே!

மேலும் நாங்கள் விரும்பும் கோரிக்கைகள் யாவும் ஸ்ரீ அன்னை அருளால் நடந்துள்ளது. நம்பிக்கையுடன் ஸ்ரீ அன்னை பாதங்களில் வீழ்ந்தால் நிச்சயம் அருளுடன் அதிர்ஷ்டமும் தருவார் ஸ்ரீ அன்னை.

நீண்ட நாட்களாக நான், என் கணவர், என் முதல் பெண் குழந்தை மூவரும் எனக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கணும் என்று வேண்டி வருகிறோம். நிச்சயமாக ஸ்ரீ அன்னை எங்களுக்கு அருள் புரிவார், அதிர்ஷ்டம் தருவார் என்ற நம்பிக்கையுடன் எழுதுகிறேன். ஸ்ரீ அன்னை கேட்டதைக் கொடுப்பவர். கேட்கத் தெரியாததையும் கொடுப்பவர். கலியுகத்தின் கண்கண்ட தெய்வம். எனக்கு இக்கடிதம் எழுத வைத்த அன்னைக்கு எனது இதயப்பூர்வமான நன்றி.

❊ ❊ ❊

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பற்றாக்குறையில் தேவைகள் பூர்த்தியாவதில்லை. உபரியான நேரத்தில் பொருள்கள் முழுவதையும் பயன்படுத்த முடிவதில்லை. இரு நேரங்களிலும் பூர்த்தியாகாத தேவை நிலைக்கிறது.

*அனைத்தையும் பூர்த்தி செய்யும் அன்னை.*



## அபரிமிதமான செல்வம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**வேலை :** மனிதனுடைய உற்பத்தித் திறன் அதிகமாவதால் மனிதன் தன் உழைப்பால் அதிகப் பணத்தை உற்பத்தி செய்கிறான்.

**உறவு :** நாளுக்கு நாள் மனிதன் மற்றவர்களுடன் பழகுவது அதிகமாகிறது. உறவு அதிகமானால் உற்பத்தி அதிகமாகும் என்ற கருத்து முழு உண்மையானாலும், பொருளாதாரரீதியாகவோ, தத்துவமாகவோ விளக்குவது எளிதன்று. உறவு அதிகமான இடத்தில் பணம் அதிகமாகப் புழங்குவதைக் காட்டலாம். பாங்க் டெப்பாசிட் 9 மடங்கு வளர்வதுபோல் இருவர் இனிக்கப் பழகுவது ஓர் உற்பத்தி ஸ்தானம். Human exchange is a point of production.

ஒரு புது ஸ்தாபனம் - ரயில்வே, தந்தி, தபால், கல்வி, சர்க்கார், internet போன்றவை - வந்தால் ஏற்கனவே உள்ள அத்தனை ஸ்தாபனங்களும் அதனுடன் இணைகின்றன. அதனால் அத்தனையும் உயர்வடைகின்றன.

இப்படிப் பார்த்தால் பணத்தின் அளவும் திறனும் உயர்கின்றன. அதன் மூலம் மனிதனுடைய திறமை அதிகரிக்கிறது. அவனால் மேலும் பணம் உற்பத்தி செய்யமுடிகிறது. இதற்கு முடிவில்லை.

நம்பிக்கை ஆரம்பத்தில் சிறியது. நாளாக ஆக நம்பிக்கை அதிகரிக்கிறது. சர்க்கார் நெல்லை நல்ல விலைக்கு வாங்கிக் கொள்ளும் என்றால் நம்பிக்கை மேலும் உயர்கிறது. நம்பிக்கை உயர்ந்தால், பணம் பெருகும்.

அதேபோல் வேகம், ஆயுள், ஸ்தாபனம், சக்தி, எண்ணம், ஏற்றுமதி ஆகியவை அதிகரித்தால் பணம் பெருகும்.

அகந்தையை வெளிப்படுத்த அனுமதியில்லை. தானே கொண்டாடலாம். வெளியில் “நானே பெரியவன்” என்று கூற இனி இடமில்லை. அகந்தை அழிந்தால், பணம் பெருகும்.

**பணமும், பண்பும் :**

நெல், கம்பு, மணிலா, உளுந்து போன்ற தான்யங்கள் பணம். மேஜை, நாற்காலி, பாத்திரம், மிக்ஸி போன்ற பொருள்கள் பணம். தையல், வைத்தியம், கூலி வேலை, கல்வி போதிப்பது, வழக்காடுவது போன்ற services சேவைகள் பணம். பொருள்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்பவன் பணம் சம்பாதிக்கின்றான். நாணயம், நல்லெண்ணம், நட்பு, கடமை, கட்டுப்பாடு, ஆகியவை பண்புகள். பொருள் பணம் என்பதை ஏற்கலாம். பண்பு பணம் என்பது விளங்கவில்லை. பண்பு என்பது மனித உறவில் மட்டுமன்று, வேலையிலும், வியாபாரத்திலும், ஆபீசிலும், தர்ம நியாயத்திலும், தனிப்பட்ட முறையிலும், ஆன்மீகத்திலும் பண்புண்டு. வேலையை அழகாகச் செய்வது (work value) வேலைக்குரியது. ஸ்டூல் ஆடினால், கால் தரையில் படியாவிட்டால் அது வேலையில்லை. ஸ்டூல் அழகாக நன்றாக இருப்பது அவசியம். வீட்டுக்கு வருபவரை “யார், ஏன் வந்தீர்கள்?” என யாரும் கேட்கமாட்டார்கள். வருபவரை அன்பாக உபசரித்து வரவேற்பது (social value) பழக்கத்திற்குரிய பண்பு. வியாபாரத்தில் விலையின் நேர்மை, பொருள் தரமாக இருப்பது (commercial value) வியாபாரத்திற்குரிய பண்பு. பண்பில்லாத மனித உறவில்லை. வியாபாரிக்குப் பண்பில்லாவிட்டால் வியாபாரம் நடக்காது. ஆபீசில் வருபவர்களிடம் முகம் சுளித்தால் கெட்ட பெயர் வரும். பழகத் தெரியாவிட்டால் ஒதுக்கப்படுவோம். பண்பு நிறைந்தவர் வசதியாகவும், குறைந்தவர் வசதி குறைவாகவுமிருப்பார்கள். **பண்பு பணம்**.

பொருளை உற்பத்தி செய்தால் அதன் மூலம் வேலை வரும். தான்யம் பத்திரப்படுத்தப்பட வேண்டும். பேப்பர் உற்பத்தி செய்தால் லாரி மூலம் அனுப்ப வேண்டும். உற்பத்தி, பொருள் எனில்



வேலையுண்டு. வேலைக்குரிய பண்புண்டு. வேலைக்குரிய பண்புகள் (functional values) என்பன அலமாரியைத் திறந்தால் மூடவேண்டும், சாவியை உரியவரிடம் தரவேண்டும். அது தவிர மனிதனுக்குரிய பண்புண்டு. சிறியவரிடம் சாவியைக் கொடுக்கும் போது அன்பாகக் கொடுக்க வேண்டும். பெரியவரிடம் தரும்போது பணிவாகத் தரவேண்டும். பெண்களிடம் தரும்பொழுது பெண்ணுக்குரிய மரியாதை வேண்டும். இவை (pure values) பண்புகள், மனிதத் தன்மைக்குரிய பண்புகள். பொருள் உற்பத்தியாவதும், வேலை செய்வதும் மனிதனுக்குரியது. பண்பு என்பது சூட்சுமமானது. அது மனிதனுடன் நிற்பதில்லை. அதற்கு முடிவில்லை. மரியாதைக்கும், நாணயத்திற்கும் எல்லையில்லை. அவை முழுமை பெறும்வரை, முடிவில்லாமல் வளர்பவை. பண்பு பணமானால், பண்புக்கு முடிவில்லை என்றால், பண்பால் உற்பத்தியாகும் பணத்திற்கும் முடிவில்லை.

***பண்புகளை முடிவில்லாமல் உற்பத்தி செய்பவன், பணத்தை முடிவில்லாமல் உற்பத்தி செய்ய முடியும் என்பது தத்துவம்.***

தரமான பொருள், குறித்தபடி கொடுப்பது, அழகான பேக்கேஜ், நாணயமான வியாபாரம், நம்பிக்கையான கொள்முதல், இனிய பழக்கம் ஆகியவை சரக்குக்கு மரியாதை தரும். அதேபோல் டாக்டர், வக்கீல், ஆடிட்டர், ஆசிரியர், ஆபீசர் ஆகியவர் செய்யும் வேலைகளும் பணியால் சிறப்படைகின்றன. பண்பு பொருள்களிலிருந்து வேறுபட்டன என்றாலும், வேலையுடன் கலந்து வரும் பண்புகளே அதிகம். மனம் ஜடத்தை உற்பத்தி செய்தது. பண்பு பொருள்களை உற்பத்தி செய்தது. நாம் பொருள்கள் என்று கூறுவது மனிதனுக்குரிய பல்வேறு பண்புகளால் உற்பத்தி செய்யப்பட்டவை. நாம் பொருள்களை ஜடமாகவும், வேலையை உழைப்பாகவும், பண்புகளை மனத்திற்குரியனவாகவும் கருதுகிறோம் என்றாலும், முடிவாக அனைத்தும் ஒன்றே.

சமூகம் பொருள்கள் மூலம் பணம் உற்பத்தி செய்வதுபோல், பண்புகள் மூலமும் பணத்தை உற்பத்தி செய்கிறது. சமூகம் பண்பால் பணத்தை உற்பத்தி செய்தால், மனிதன் பண்பால் பணத்தை உற்பத்தி செய்யலாம். பண்புள்ளவர் பண்பற்றவரைவிட அதிகமாகச் சம்பாதிப்பதைக் காண்கிறோம். பண்பு தனியாகப் பணம் சம்பாதிப்பதைக் காண்பது அரிது. ஒரு புதிய பழக்கம், ஸ்தாபனம் சமூகத்தில் உற்பத்தியானால், சமூகம் ஓரளவுக்கு அதற்குத் துணை செய்யும். அப்பழக்கம் வேரூன்றிவிட்டால், அதுவே தானாக வளரும். ஒரு செடியை நட்டால் நாம் அது வேரூன்றுவதுவரை தண்ணீர் விடுகிறோம். அதன்பிறகு தானே வளர்வதுபோல் சமூகப் பண்புகள் ஓரளவுக்கு வளர்ந்தபின் தாமே வளரும்.

ஆயிரம் ஆண்டுகட்கு முன் மனிதன் பேச்சை அதிகமாக அறியவில்லை. ஓரூரில் கொஞ்சம் பேர்தான் சரளமாகப் பேசுவார்கள். மற்றவர்கள் எளிய சொற்களை மட்டும் அறிவார்கள். அன்று ஒருவன் சளைக்காமல் பேசுவதை ஆச்சரியமாகப் பார்த்தனர். ஒரு நாள் ஊரிலுள்ள அனைவரும் அவன்போல் பேசுவார்கள் என்று அன்று கூறியிருந்தால், எவரும் நம்பியிருக்கமாட்டார்கள். இன்று ஓரூரில் ஒரு கோடி பணம் உள்ளவர் சிலர். ஒரு நாள் ஒவ்வொருவருக்கும் ஒரு கோடி சொத்திருக்கும் என்று இன்று கூறினால் நம்புவது கஷ்டம். மொழி பரவியதுபோல் பணமும் பரவும். மொழி வளர்ந்து வேரூன்றி தானே வளர ஆரம்பித்துவிட்டது. தன்னயறியாமல் வளர்கிறது.

இது மொழிக்கும், பணத்திற்கும் மட்டும் உரிய சட்டமன்று. கல்விக்கும் உரிய சட்டம் இதுவே. நாணயத்திற்கும் அதுவே பொருந்தும். நம்பிக்கைக்குரிய சட்டமும் அதுவே. சமூகம் ஏற்படுத்துகிற ஸ்தாபனங்களாகிய விவசாயம், வியாபாரம், மார்க்கட், போக்குவரத்து, விளையாட்டு, கல்வி, குடும்பம், பணம், மொழி ஆகிய அனைத்து ஸ்தாபனங்கட்கும் இது பொது விதி.



ஆயிரமாண்டாக மார்க்கட் வளர்ந்தது. கடந்த 20 வருஷமாக மார்க்கட் வளர்வது, tourism வெளிநாட்டுப் பிரயாணிகள் எண்ணிக்கைக் கூடுவது இந்தச் சட்டப்படிதான். நாம் வளர்ச்சியைக் காண்கிறோம், வளர்ச்சியின் காரணத்தை அறிய முயல்வதில்லை. பொருள்கள் பணம், தொழில் பணம். பண்பு பொருள்களுக்கு அதிக விலை தரும், தொழிலுக்கு அதிக பீஸ் தரும் என்பவை விளங்கும். பண்புகள் மட்டும் பணம் என்பது விளங்காது. கடந்த 20 அல்லது 30 ஆண்டுளாக இந்திய மார்க்கட் அது போன்ற பண்புகள், வியாபாரத்திற்குரிய பண்புகளை - punctuality, சுத்தம், நாணயம், அழகான பேக்கேஜ் போன்ற பண்புகள் - ஏற்றதால் விரிவடைந்துள்ளது. எந்த நாட்டில் மார்க்கட் வளர்ந்தாலும், இப்படித்தான் வளர்கிறது. பண்பால் வளர்ந்தன என எடுத்துக் கூறலாம். எந்தக் கோணத்தில் விளக்கினாலும், பண்புகள் அதனுள் அடக்கம்.

கம்ப்யூட்டர் அசுர வேகத்தில் வளர்கிறது. வேகத்திற்குரியது கம்ப்யூட்டர். வேகம் வளர்ச்சி. வேகத்தை வளர்க்கும் கம்ப்யூட்டர் வளர்வதில் ஆச்சரியமில்லை. வேகம் காலத்தைச் சுருக்குகிறது. சக்தியைக் குறைக்கிறது. வேலையைக் குறைக்கிறது. இவையெல்லாம் பணம் பெருகும் வழிகள். பொருளாதாரம் ஒரு நாட்டில் முன்னேறுவதை டெக்னாலஜி மூலம் அறிகிறோம், முதலீடு மூலம் அறிகிறோம், நிலக்கரி, எண்ணெய் போன்றவை கிடைத்ததன் மூலம் புரிந்து கொள்கிறோம். பண்புகளால் பொருளாதாரம் வளர்வதை நாம் கவனிப்பதில்லை.

சமூக வளர்ச்சிக்குப் பல அங்கங்களுண்டு. பொருளாதாரம் அதில் ஒன்று. அரசியல் வளர்ச்சி முக்கியமானது. ராணுவம் அடுத்தது. கல்வி, கலை எனப் பல அம்சங்களில் பொருளாதாரம் ஒன்று என்பதை நாம் முக்கியமாகக் கருத வேண்டும்.

*தொடரும்....*



✣✣✣

## The great are the strongest when they stand alone
## பெரியது தனித்திருந்தால் வலிமையுடையது

ஒருவருக்கு உடல் நலமில்லை எனில் மற்றவர்கள் வந்து விசாரிக்கிறார்கள். ஒரு வீட்டில் வருத்தமான சம்பவம் நடந்துவிட்டால், ஊரே வந்து விசாரிக்கும். விசாரிக்காதவரை எதிரியாக நினைப்பார்கள். இதை ஒரு நல்ல குணமாகவும், நாகரீகச் சின்னமாகவும் நாம் பின்பற்றுகிறோம். இதில் உள்ள சூட்சுமச் சட்டத்தை நம்மவர்கள் - இந்தியர்கள் - அறிவார்கள். ஆனால் அது இன்று பின்பற்றபடவில்லை. இரு தரமாகவும் சட்டம் செயல்படுவதால் அவற்றைப் பிரித்துப் பார்க்க முடியாது.

அன்பர் ஒருவருக்கு ஊறு செய்த உலகம் ஜெயித்தது. அவர் தலையில் இடி விழுந்தது. சாதாரணமாக உலக வழக்கை மீறி அவரை உடனுள்ள 60 பேரில் ஒருவரும் வந்து விசாரிக்கவில்லை. இடி, பேரிடியாகியது என உவகை பூத்தனர். அன்னை செயல்பட்டார். நிலைமை மாறியது. இடி பேரிடியானது உண்மை. ஆனால் அது அன்பருக்கில்லை. செய்தவருக்குப் பேரிடியாயிற்று.

**அன்பருக்கு வந்த ஆபத்து சுவடேயின்றி துடைத்தெடுக்கப்பட்டது. அது 5 நாளில் நடந்தது.**

மற்றோர் அன்பருக்கு அதே போன்ற இடி விழுந்தது. இது இலாக்கா டைரக்டர் இஷ்டப்பட்டு வந்தது. அவருடன் உறையும் பெரிய ஆபீசர்கள் 100க்கு மேற்பட்டவர். ஒருவர் தவறாமல் வந்து இதமாக விசாரித்தனர். இவர் விஷயமும் அன்னைக்குப் போயிற்று. அன்னை செயல்பட்டார். இவருக்கும் மீண்டும் இழந்தது திரும்ப வந்தது. ஆனால் 110ஆம் நாள் வந்தது. அன்னை செயல்பட்டு மூன்றாம் நாள் இவருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அன்னைச் செயலின் வேகமும்



குறையவில்லை, வீரியமும் குறையவில்லை. விபரம் அறிந்து பலன்பெற 110 நாளாயிற்று.

அன்பரைப் பொருத்தவரை அன்பரல்லாதவர் ஆதரவு, ஆதரவில்லை, தொந்தரவு. பணமுள்ளவனுக்கு ஆதரவாக ஏழைகளோ, கடன்காரர்களோ வருவது பலன் தாராது. தொந்தரவு தான் தரும். அறிவாளியின் கட்சியை எடுத்துச் சொல்ல அறிவற்றவர் வந்து ஆதரவு தருவது பலனில்லை. பயப்படுபவனுக்குத் துணையாகப் பயந்தவர்கள் வரமுடியாது. தைரியசாலிக்குப் பயந்தாங்கொள்ளியின் ஆதரவு ஆதரவில்லை.

**அன்பருக்குக் கஷ்டம் வந்த பொழுது அன்பரல்லாதவர் தரும் ஆதரவு கஷ்டத்தை நீடிக்கும்.**

மனம் பலர் கூறும் ஆறுதலை நாடும். எவர் ஆறுதல் கூறினாலும், அன்னைச் செயலின் பலன் பலம் இழக்கும்.

- பொறாமையால் விசாரிக்க மறுத்தது முதல்வருக்கு அன்னை உடனே பலன் தர உதவியது.
- நட்பால் விசாரித்தது அடுத்தவருக்கு அன்னை கொடுத்த பலனைப் பெற பல மாதங்களாயின.

✣✣✣

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் ஒரு நம்பிக்கையை இழந்து அடுத்ததைப் பெறுமுன் உள்ள நிலை குழப்பமாகும்.

*மாறும் நம்பிக்கை குழப்பத்திற்கு வித்து.*

## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

தம்பி - ஓஹோ! அதனால்தான் ஸ்ரீ அரவிந்தர் எந்த முறையும் இந்த யோகத்திற்குத் தேவையில்லை என்றாரோ? ஆசனமும், பிராணயாமமும் அன்பை உற்பத்தி செய்யா.

அண்ணன் - இந்த யோகத்திற்கு பகவான் கூறும் முறை ஒன்றே. Opening. "சத்தியத்தை நான் மேலேயிருந்து கீழே கொண்டு வந்துள்ளேன். Opening விழிப்பாக அதை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்கிறார். அந்த விழிப்பு **அன்பு சுரக்கும் இதயம்**.

தம்பி - அன்பு பிறந்தது என்பதற்கு என்ன அடையாளம்?

அண்ணன் - எப்பொழுதும் எந்தக் காரணமுமில்லாமல் சந்தோஷம் அபரிமிதமாக நிதானமாகப் பொங்கி ஊற்றெழுந்தால் அன்பு உள்ளே உற்பத்தியாயிற்று எனக் காட்டும்.

தம்பி - சும்மாயிருந்தால், ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றுகிறதே அது தோன்றக் கூடாதா?

அண்ணன் - அதுவே சரியான விளக்கம். நாம் பேச்சுத்துணை தேடுகிறோம். எதையாவது செய்தால் தேவலைபோல இருக்கிறது. துணை தேடினால் vital உணர்வுக்கு நிதானமில்லை என்று பொருள். எதையாவது செய்தால் தேவலை என்றால் physical urge உடலில் அரிப்பு இருக்கிறது என்றாகும். எதையாவது யோசனை செய்தபடியிருந்தால், புரிய வேண்டியது பாக்கியிருக்கிறது என்று பொருள். உடல், உணர்வு, மனத்தின் குறைகளைக் காட்டும் அடையாளங்கள் இவை.



தம்பி - குறைகள் போய் நிறைவு வந்தபிறகு தானே அன்பு சுரக்கும்.

அண்ணன் - அது தவசிக்குரியது. யோக நிலை. நாம் அதை இலட்சியமாகக் கொண்டு குழந்தையிடம் தாயன்பு செலுத்துவதற்குப் பதிலாக உயர்ந்த அன்பு செலுத்த முயல்வது நாம் எடுத்துக் கொண்டதற்கு உதவும்.

தம்பி - அதைச் செய்தால், அன்னையை ஜீவியமாக அறிவது அன்பு சுரக்க வழி செய்யும்.

அண்ணன் - அது சரி, அது நம் போன்றவர்க்கு அதிகபட்ச யோக முயற்சி. மனதில் அன்பு (divine love) இருப்பது மிக உயர்வு. அப்படிப்பட்டவர்க்கு எவருக்கும் கட்டுப்படாத மனிதர்கள், பிரச்சினைகள் கட்டுப்படும். 15, 20 வருஷமாக ரேசுக்குப் போகிறவர், சீட்டாடுபவர், பெருமுயற்சி செய்து குடியைவிட முடியாதவர், போன்றவர் அன்பு உள்ளவரைச் சந்தித்தால், அவர் பார்வை அவர்களை மாற்றும். கருமி அவரிடம் தாராளமாக நடப்பான்.

தம்பி - அது அன்னைக்குரிய நிலையன்றோ?

அண்ணன் - அன்னையை ஏற்பது எனில், அன்னை ஏதாவது ஓர் அம்சத்தில் நம்மை அவர்கள் நிலைக்கு உயர்த்தி விடுகிறார்கள்.

தம்பி - அப்படியானால், நமக்கெல்லாம் அன்னை என்றால் என்ன என்று தெரியாது என்று கூற வேண்டும்.

அண்ணன் - படிப்பு என்ற தலைப்பில் அன்னை 5 வகைகளான கல்வியை விவரிக்கின்றார். Mental education, Vital

education, Physical education, Spiritual education, Psychic education. மனம், உணர்வு, உடல், ஆன்மா, சைத்தியப் புருஷனுக்குரிய கல்வி என்று கூறுகிறார்கள். இதைப் பின்பற்றினால் போதும்.

தம்பி – அன்னையை ஏற்க மனம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பது முக்கியம். அன்னையை ஜீவியம் என்று அறிவதை மேலும் விளக்க வேண்டுகிறேன்.

அண்ணன் – நாம் நம் சூழ்நிலை முழுவதையும் அறிவதில்லை. உதாரணமாக கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி உள்ள ஊரில் அதன் பிரசிடெண்ட் பாங்க்கிற்குப் போய் எங்கள் ஊருக்கு லோன் தரவேண்டும் எனக் கேட்கிறார். சொஸைட்டிக்கே எல்லா அதிகாரங்களும் உண்டு என இவருக்குத் தெரிவதில்லை. பல்கலைக் கழகத்தில் சேர்ந்தால் நாம் பட்டம் பெறுகிறோம். நம் நாட்டில் Ph.D. இன்று பரவலாகத் தெரிகிறது. ஒரு பல்கலைக் கழகத்தில் அதன் 40 ஆண்டு வாழ்வில் ஆங்கிலத்தில் ஒருவரே Ph.D. எடுத்தார். நியூடன், ஐன்ஸ்டீன், மில்டன் ஆகியவர்களை உருவாக்கியது பல்கலைக்கழகங்கள். நம் நாட்டில் 225 பல்கலைக் கழகங்கள் அதுபோல் செயல்பட முடியும் என நாம் நினைப்பதில்லை.

தம்பி – ஆமாம். அன்னையிடம் வரும் பிரார்த்தனைகளில் முக்கியமானவை திருமணம், வேலை, கடன் ஆகியவை.

அண்ணன் – பிரம்மம் என்பது அனந்தம் (infinity) என்ற தத்துவத்தை நாம் அறிவோம். ஆனால் வாழ்வில் அனந்தத்தை நாம் நினைப்பதில்லை. நமக்குத்



தேவையானவை – காற்று, நீர், உணவு, உடை, பணம் – அளவு கடந்திருக்கின்றன, வாழ்வால் அளவில்லாமல் நமக்கு இவற்றைத் தரமுடியும் எனவும் நினைவு வருவதில்லை. இதையே practical concept of infinity நடைமுறையில் அபரிமிதம் என்று கூறுகிறோம்.

தம்பி – புரிகிறது. இதன் உற்பத்தி ஸ்தாபனம் அன்னை என நாம் அறிய வேண்டுமா?

அண்ணன் – ஆம். டெலிபோன் உள்ளூரில்தான் பேச உபயோகப்படும் என்று ஒருவர் நினைத்தால், அவர் வெளியூரில் உள்ளவர்களைக் கூப்பிடவும் நினைக்க மாட்டார். டெலிபோன் வெளிநாட்டிலுள்ளவரிடமும் பேசும். அன்னை என்பது ஜீவியம் என்று அறிந்தால் அதற்குத் தத்துவரீதியாக என்ன அர்த்தம்? நடைமுறையில் எப்படி அதைப் புரிந்து கொள்வது? தத்துவரீதியாக உலகத்தைச் சிருஷ்டித்தவர் அன்னை எனவும், நடைமுறையில் நம் வாழ்வில் எதையும் சிருஷ்டிக்க வல்லவர் எனவும் புரிய வேண்டும்.

தம்பி – உதாரணமாக கடற்கரையில் நிலம் உள்ளவர் போர் போட்டால் தண்ணீர் உப்பாக இருக்கும் என்று அறிவார். நல்ல தண்ணீர் கிடைக்க வேண்டும் என நினைக்க முடியாது. அன்னை கடலருகிலும் அன்பருக்கு நல்ல தண்ணீர் கொடுப்பார் என நம்மால் நம்ப முடிவதில்லை.

அண்ணன் – நடுக்கடலிலும் அன்னை நல்ல தண்ணீர் கொடுப்பார் என்பது உண்மை. நாம் பேராசையால் கேட்டால் பலிக்காது. அன்னைக்கு இந்த சக்தியுண்டு. அதை நாம் நம்பிக்கையால் பெற வேண்டும் எனில் பலிக்கும்.

தம்பி - அது பெரிய நம்பிக்கை.

அண்ணன் - அந்த நம்பிக்கை எப்படி வருகிறது? அன்னை யார் எனத் தெரிந்தால் அவர்களால் இதை எப்படிச் செய்ய முடியும் எனத் தெரிந்தால், அந்த ஞானம் சக்தியுள்ளது. Knowledge is Power.

தம்பி - அதுபோல் அன்னையை அறிய வேண்டுமானால், அன்னையால் எதுவும் முடியும்.

அண்ணன் - பொதுவாகப் பேசுவதைவிட, குறிப்பாகப் பேசினால் விளங்கும். ஹைகோர்ட்டில் கேஸ் தோற்றபின் நம்பிக்கை வாராது. அப்பொழுது வரும் நம்பிக்கைதான் நம்பிக்கை. எதற்கும் அன்னையிடம் வழியுண்டு. வழியில்லை என்றால் அன்னை வழி ஏற்படுத்திக் கொள்வார் என்பதை அறிதல் அவசியம்.

தம்பி - அன்னையை infinity அனந்தமாக அறிய வேண்டுமா?

அண்ணன் - தத்துவம் அது பற்றிக் கூறுவதைப் படிக்க வேண்டும், நடைமுறையில் அதைப் பார்க்க வேண்டும். பார்த்ததைப் புரிந்து ஏற்று நம்ப வேண்டும்.

தம்பி - ஒரு தொழிபதிருக்கு சர்க்கார் 18 கோடி நஷ்டம் வைத்தது. சர்க்காரே மாறியது. இனி எப்படிக் கேட்பது? யாரைக் கேட்பது? கேட்க முடியும், சர்க்காரைக் கேட்க சட்டமில்லை என்றால், அன்னையைக் கேட்க நியாயம் உண்டு என அவர் நம்பியபின் அப்பணம் வந்தது உனக்குத் தெரியாதா? நடைமுறையில் எதுவும் அன்னையால் முடியும் என்ற நம்பிக்கை அறிவின் அடிப்படையில் ஏற்படுவது, அன்னையை அனந்தமாக அறிவது என்று கூறுகிறீர்களா?



அண்ணன் - நமக்கு நடப்பவற்றை இக்கண்ணோட்டத்தில் ஆராய்ந்தால் இது அன்றாட நிகழ்ச்சி என விளங்கும். விளங்குவது ஞானம். பலன் பெறுவது சித்தி. முடியாது, நடக்காது என்பது அன்னையிடம் இல்லை என மூட நம்பிக்கையில்லாமல் அறிவது அன்னைக்குரிய நம்பிக்கை. நம்பினால் நடக்கும், நடந்தவற்றை ஆராய்ந்தால் புரியும்.

தம்பி - இதைப் பெறும் மனப்பான்மை எது?

அண்ணன் - நம்மால் முடிந்த அனைத்தையும் ஆர்வமாக, சிறப்பாக நடத்தி முடிக்கும் மனப்பான்மை.

தம்பி - இந்தக் குழந்தை படபடப்பாக இருக்கிறது. நாமெப்படிப் புரிந்து கொள்கிறோம்? சிறு வயது, படிப்பு அதிகம். படபடப்பு வருவது நியாயம். நியாயம் என நம்பினால் அது போதாது. நியாயம் சரி. அது அனைவருக்கும் சரி. நமக்குச் சரியில்லை. இந்தப் படபடப்பு பேரமைதியாகும் என்று புரிய வேண்டும். அதை நம்ப வேண்டுமா?

அண்ணன் - நம்ப வேண்டும். நம்மால் அதை அகற்ற, முடிந்ததைச் செய்ய வேண்டும். முடியுமானால், படபடப்பை அமைதியாகத் திருவுருமாற்ற முனைய வேண்டும்.

தம்பி - எப்படித் திருவுருமாற்றுவது?

அண்ணன் - முதற்காரியமாக அது திருவுருமாறும் என்று நம்புவது, பிறகு அதற்காகப் பிரார்த்திப்பது. முடிவாக எதைச் செய்தால் குழந்தை அமைதியுறும் எனச் சிந்தித்துத் தெரிந்தவற்றை எல்லாம் செய்து முடிப்பது.

தம்பி - நம் கடமை முடியுமிடத்தில் அன்னை ஆரம்பிப்பார் என நம்புவது!

அண்ணன் - நாம் முடித்த பின், அன்னையின் செயலை ஆராய்ச்சிக் கண்ணுடன் புரிந்துகொள்வது பயன் தரும். அதை இருவகைகளாக அன்னை செய்கிறார். 1. நமக்குத் தெரியாமல் உள்ள potentials வசதிகளை முன்னுக்குக் கொண்டு வருகிறார். 2. எந்த வசதியுமில்லாத இடத்துப் புதிய வசதியை உற்பத்தி செய்கிறார்.

தம்பி - பாலைவனத்தில் நீரூற்று வந்தது. விவசாயத்திற்கு புதிய சட்டம் போட்டுக் கடன் கொடுத்தார்கள். தெரியுமே!

அண்ணன் - பாலைவனத்தில் உள்ள நீரை நாம் அறியவில்லை. அன்னை நமக்கு அதை அறிவித்தார். விவசாயிக்கு உதவச் சட்டமில்லை. சட்டத்தை அன்னை ஏற்படுத்தினார் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

தம்பி - நம் தேவையைப் பூர்த்தி செய்வதே அன்னைக்குக் கடமையா?

அண்ணன் - அது சரி. அதைவிட அன்னை சக்திக்குத் தேவையைப் பூர்த்தி செய்யும் திறனுண்டு எனப் புரிவது நல்லது.

தம்பி - நமக்குத் தேவையிருந்தால், எதுவானாலும், பூர்த்தி செய்யும் திறனுண்டு என்பது உண்மையா? அப்படியானால் நாம் தேவையை உற்பத்தி செய்தால் அன்னை உடனே பூர்த்தி செய்வாரா?

அண்ணன் - இதுவே கருவான இடம், நாம் புதிய தேவைகளை நாடினால் அது பூர்த்தியாகும். மனிதனுடைய கடமை புதிய தேவைகளை ஏற்படுத்திக் கொள்வது.

தம்பி - இப்படிச் சொன்னால் எளிமையை நாடுபவர்கள் ஏற்கமாட்டார்கள்.



அண்ணன் - முதலிலேயே சொல்லிவிட்டேன். மனப்பான்மை முக்கியம். புதிய தேவையை நாடும் மனம் அதை நம் முன்னேற்றத்திற்காக நாடினால் அது இலட்சியம்.

தம்பி - நீங்கள் சொல்பவற்றையெல்லாம் கேட்டால் விஷயங்கள் ஏராளமாக இருக்கின்றன. நாம் அறியவில்லை என்று நினைக்கத் தோன்றுகிறது.

அண்ணன் - பெரும்பாலோர் அன்னையை ஏற்றதன் சிறப்பை அறிவதில்லை.

தம்பி - ஓர் உதாரணம் சொல்லுங்களேன்.

அண்ணன் - வாழ்வு என்று நாமறிவதில் புதியது, புதிர், பெரியது, வாய்ப்பு, ஆச்சரியமில்லை.

தம்பி - சரி.

அண்ணன் - அன்னை வாழ்வில் புதியன உண்டு. பல விஷயங்கள் புதிராகும், பெரியது என்பது கலந்து வரும். எல்லாமே வாய்ப்புதான், இடறி விழுந்தால் ஆச்சரியம்.

தம்பி - நீங்கள் சொல்லும்பொழுது புரிகிறது. நாம் இதை இப்படி எடுத்துக் கொள்வதில்லை.

அண்ணன் - உதாரணம் எனத் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை. கவனித்தால் எல்லா விஷயங்களும் அப்படித்தான். வாழ்வில் டைப் அடிக்கப் போனால் டைப் கற்றுக் கொள்ளலாம். அன்னை வாழ்வில் டைப் அடிக்கப் போன இடத்தில் முதல் மந்திரி ஆபீசுக்கு வேலை கிடைக்கிறது. பணம் வசூல் செய்தால் அதிகம் கிடைக்கிறது. கடன் கேட்கப் போனால் இனாம் கிடைக்கிறது. அதுவரை தெரிகிறது. ஏன் அப்படி இருக்கிறது? அதன் மூலம் நாம் என்ன புரிந்து

கொள்ள வேண்டும் என்று தெரிவதில்லை. அன்னையிடம் எந்தச் செயல் பின்னால் அன்னை, அனந்தம், பெருக்கம், அதிர்ஷ்டம் இருக்கிறது என்று அறிவதில்லை. அறிந்து அதனைப் பெற முன்வர வேண்டும்.

*...தொடரும்*

❖❖❖

## சொஸைட்டியின் வெளியீடுகள்

கர்மயோகியின் நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 2. | மனம் - ஜீவனின் முக்கிய கரணம் | ரூ. 20 |
| 3. | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |
| 4. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 5. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 6. | இரத்தினச் சுருக்கம் | ரூ. 20 |
| 7. | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. 40 |
| 8. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 9. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 10. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |
| 11. | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | ரூ.100 |
| 12. | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. 20 |
| 13. | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. 20 |
| 14. | யோக வாழ்க்கை விளக்கம் - I | ரூ. 80 |
| 15. | ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் | ரூ. 60 |
| 16. | நூறு பேர்கள் (2 பாகங்கள் சேர்ந்தது) | ரூ.150 |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.





## புலன்களுக்குப் புலப்படாதது

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

இல. சுந்தரி

பாட்டி உன்னிடம் பேசினார்களா? என்று கேட்டாள் மீரா.

உடனே அவள் கேட்ட கேள்வி இவளை அதிரச் செய்தது. ஏன் உங்களிடம் பாட்டி பேசுவதில்லையா? என்றாள்.

குழந்தையின் நம்பிக்கையை கலைக்காதே என்று உள்ளுணர்வு எச்சரித்தது.

பேசுவாங்களே என்று சமாளித்துக் கொண்டு நானும் இரண்டு கேள்விகள் இப்போ தரப்போகிறேன். அதற்கும் நீ சரியான விடையெழுத வேண்டும் என்றாள்.

உம் கேள்வியைச் சொல்லுங்கள் என்றாள் பெருமிதமாக.

இன்றைக்கு நேரமாகிவிட்டது. எனக்குத் தூக்கம் வருகிறது. நாளை நல்ல கேள்வியாகச் 'செலக்ட்' செய்து வருகிறேன். இப்போது சாப்பிட்டுத் தூங்கலாம் வா என்றாள்.

வெளியேயிருந்த ராமையாவுக்கு இந்த உரையாடல் ஒன்றும் தெரியாது.

மறுநாள் அமிர்தாவுக்குத் தெரியாமல் அவள் பள்ளிக் கூடத்திற்குப் போய், அவள் தலைமையாசிரியரிடம் அமிர்தாவின் படிப்பைப் பற்றி விசாரித்தாள்.

மிகவும் நல்ல பெண். படிப்பிலும் சுட்டி. நேற்று G.K.யில் அவள் தான் கிளாஸ் பர்ஸ்ட் என்று ஒரே கைதட்டல். அவள் மிஸ்ஸைப் பார்த்துவிட்டுப் போங்கள் என்று மலர்ச்சியுடன் கூறிய தலைமையாசிரியர், பியூனை அழைத்து, மேரி மிஸ்ஸைக் கூப்பிடு. அமிர்தாவின் ஆன்ட்டி வந்திருக்காங்கன்னு சொல் என்றார்.

ஆசிரியர்கள் அறையில் புத்தகம் படித்துக் கொண்டிருந்த மேரியிடம் இவளை அழைத்துப் போனான் பியூன். இவளைக் கண்ட மேரி மிஸ், மலர்ந்து சிரித்தாள். "வாங்க மிஸ் மீரா. உங்க பெண் படுசுட்டி. எந்த ஒர்க் கொடுத்தாலும் அழகாகச் செய்து வருகிறாள். நானே உங்களைப் பார்த்துப் பாராட்ட நினைத்தேன்" என்றாள். "தாயில்லாப் பெண். அதனால் அவளிடம் சற்று கவனமாக இருக்கவேண்டும். அதுதான் பார்த்துப் போக வந்தேன்" என்று கூறி வந்துவிட்டாள்.

அன்றிரவு இவள் வீட்டிற்கு வந்ததும் மறவாமல் அமிர்தாவே இவளிடம் வந்து, ஆன்ட்டி இரண்டு கேள்விகள் தருவதாய்ச் சொன்னீர்களே? என்று கேட்டாள்.

ஓ! அதுவா? என்று கூறி ஒரு தாளை எடுத்து அதில் இரண்டு கேள்விகளை எழுதிக் கொடுத்தாள்.

சாவித்ரி என்ற காவியத்தை எழுதியவர் யார்?

அவருடன் யோகம் செய்தவர் யார்?

குழந்தை சிறிதும் தயங்காமல் டேபிள் மீதுள்ள தாளைப் பார்த்துப் படிக்கிறாள். பிறகு நிமிர்ந்து ஸ்ரீ அன்னையைப் பார்க்கிறாள். பிறகு எழுதுகிறாள். இப்படியே சில நிமிடங்கள் சென்றதும், ஆன்ட்டி சரியா என்று பாருங்கள் என்று தாளை எடுத்து வருகிறாள்.

**அதில் ஸ்ரீ அரவிந்தர்,**

**ஸ்ரீ அன்னை,**

என்ற விடையைப் படித்து அதிர்ந்து போனாள்.

*தொடரும்...*

✣✣✣

---

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

## 40 வருஷம் புகை பிடித்தவர்

ஆசிரமத்தில் பல ஆண்டு தங்கியவர் தம்மூர் திரும்பிய ஓராண்டில் இருமல் தொந்தரவால் டாக்டரிடம் போனார். சோதனை செய்த டாக்டர் "இது T.B. 7, 8 ஆண்டுகளாக இருக்கிறது. எப்படி நீங்கள் வேலைகளைச் செய்கிறீர்கள்?" எனக் கேட்டார். ஆசிரமத்திலிருந்தவரை அப்படி ஒரு தொந்தரவு இருப்பதாக அறியார்.

84 வயதானவர் டாக்டரிடம் போனார். டாக்டர் செய்த சோதனைகளைப் பற்றி அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தபொழுது, "நான் சிகரெட் பிடிப்பவன். இப்பொழுது 10 ஆண்டாக விட்டு விட்டேன்" என்றார். டாக்டர் எத்தனை நாளான பழக்கம் அது? எந்த சிகரெட் பிடிப்பது வழக்கம்? எத்தனை சிகரெட் ஒரு நாளைக்கு பிடிப்பதுண்டு எனக் கேள்வி மேல் கேள்வி கேட்டுவிட்டார்.

40 ஆண்டு புகை பிடித்தேன்.
தினமும் 60 சிகரெட் புகைப்பேன்.
இருமல் வந்ததால் பிறகு அதை விட்டுவிட்டேன் என்றார்.

டாக்டர் நுரையீரலை சோதனை செய்தார். புகை பிடித்தால் - இந்த அளவு - என்னென்ன அடையாளம் எங்கெல்லாம் இருக்கும் என்பது டாக்டருக்குத் தெரியும். அத்தனை சோதனைகளையும் செய்து பார்த்தார்.

நீங்கள் சொல்வதுபோல் எந்த அடையாளமும் தெரியவில்லையே என்றார் டாக்டர். அவருடைய மகன் ஆசிரமத்தில் 30 ஆண்டாகத் தங்கியிருக்கிறார் என்பதால் அன்னை என்றால் என்ன என்று ஒரு முறையும் மகனைக் கேட்காத தகப்பனுக்கு அன்னை கொடுத்த பாதுகாப்பு அது.

✯ ✯ ✯

## கேள்வித்தாள்

அகில இந்திய போட்டியில் கலந்து கொண்ட 1200 பேரில் ஒருவரே தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் அன்பர். 1970இல் அமெரிக்கா போவது இன்று போலில்லை. தேர்ந்தெடுக்கப்பட்டவர் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டார்.

M.Sc. Computer Science மாணவ மாணவிகள் 100 பேருள்ள கல்லூரியில் பெரிய கம்பனி அடுத்த ஆண்டு - பரீட்சை பாஸான பின் - வேலைக்காக மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வருகின்றனர். ஆரம்பச் சம்பளம் 22,000/- ரூபாய்.

ஒரு மாணவன் அவர்கள் வருமுன் பரீட்சை கேள்வித்தாளைக் கல்லூரிக்குக் கொண்டுவந்து விநியோகம் செய்தான். பார்க்காத மாணவனோ, மாணவியோ இல்லை எனலாம். அன்னை மீது நம்பிக்கையில்லாத அன்பர் ஒரு பெண். அவளுக்கு அன்னையைவிட மனச்சாட்சி, நேர்மை முக்கியம். பெண் புத்திசாலி. மனச்சாட்சி நிதர்சனமாகத் தெரிவதுபோல், அன்னை தெரிவதில்லை. அவளுக்குத் தெரிந்து அன்னையை ஏற்றவர்கள் எல்லாம் எதுவும் தெரியாமல் மூடநம்பிக்கை உள்ளவர்கள். **அன்னைச் சூழலிலிருப்பவர். அனைவரும் பார்த்த கேள்வித்தாளைத் தாம் பார்க்க மறுத்துவிட்டாள்.**

- எட்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- அவர்களுள் 3 பேர் கேள்வியை முன்னரே அறிந்தவர்.
- கேள்வித்தாளைப் பார்க்க மறுத்த இப்பெண் தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

நாம் மனச்சாட்சியை நம்பினாலும், நாம் சூழலிலிருப்பதால், அன்னை நாம் நம்புவது மூலம் செயல்படுகிறார்.

✯ ✯ ✯